# மகிழ்ச்சி

## குழந்தைகளின் குதூகலம்

**6**



Maria

**விடை தொகுப்பு**

மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.

முதல் பதிப்பு 2020

பதிவு அலுவலகம்
138, ஹைவேய்ஸ் காலனி, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி – 620 020.

தலைமை அலுவலகம்
30 & 31, நட்சத்திரா, ஐ.ஏ.எஃப். சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059.
தொலைபேசி : 044 – 22392332

மின்னஞ்சல்
info@mariapublishers.com

இணையதளம்
www.mariapublishers.com

வெளியிட்டோர்
மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.,
13, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம்,
திருச்சிராப்பள்ளி – 620 020.
தொலைபேசி : 0431 – 2331245

அட்டை வடிவமைப்பு
முத்துக்குமார்

புத்தக வடிவமைப்பு
ஜென்சி

அச்சிட்டோர்
தி சபையர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

## 1. தமிழின் இனிமை

**பக்கம் 10**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. காய் 2. இறங்கிய 3. வெயில் 4. துன்பம் 5. மறைவு

**ஆ) பிரித்து எழுதுக.**

1. கழை + இடை 2. எனது + உயிர் 3. குளிர் + இளம் + நீர்
4. நாவில் + இனித்திடும் 5. செம்மை + நெல் 6. தன் + நிகர்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. 'இனியன' என்று பாரதிதாசன் குறிப்பிடுவன யாவை?

   நன்கு பழுத்த பழச்சுளையின் இனிப்பு சுவை, முற்றிய கரும்பு சாற்றின் சுவை, மலரில் உள்ள தேனின் சுவை, காய்ச்சிய வெல்லப் பாகின் சுவை, பசும்பாலின் சுவை, குளிர்ந்த இளநீரின் சுவை ஆகிய அனைத்தும் "இனியன" என பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

2. பாரதிதாசன் தன் உயிர் எனக் குறிப்பிடுவது எதனை?

   பாரதிதாசன் தன் உயிர் எனக் குறிப்பிடுவது நமது தாய்மொழியாகிய தமிழ் மொழி ஆகும்.

3. எவற்றையெல்லாம் மேலானவை எனக் கவிஞர்கள் எழுதுவதாக பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

   குளிர்ந்த வெண்ணிலவின் ஒளியால் மின்னும் நீல நிற வானம், கடல் முழுவதற்கும் ஒளி தரும் காலை கதிரவனின் உதயம், மனதை மயக்கும் மாலை நேர மலைகளின் தோற்றம் முதலியவை மேலானவை எனக் கவிஞர்கள் எழுதுவதாக பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

## 2. தொல்காப்பியம்

**பக்கங்கள் 11-12**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் இசை நிறைவாவது எது?

   ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் இசை நிறைவாவது இகரமும் உகரமும் ஆகும்.

2. ஓரெழுத்து ஒரு மொழியாவன எவை?

   உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் ஓரெழுத்து ஒரு மொழியாகும்.

3. மொழி நிறைவு இல்லாதவை எவை?

   உயிர் குற்றெழுத்து ஐந்திற்கும் மொழி நிறைவு இல்லை.

4. ஐகாரம் என்பது எது? ஔகாரம் என்பது எது?
ஐகாரம் என்பது அகரமும் இகரமும் ஆகும். ஔகாரம் என்பது அகரமும் உகரமும் ஆகும்.

5. எல்லா உயிரெழுத்துகளோடும் மொழிக்கு முதலாவதாகச் செல்லும் ஐந்து எழுத்துகளை எழுதுக.
எல்லா உயிர் எழுத்துகளோடும் மொழிக்கு முதலாவதாகச் செல்லும் ஐந்து எழுத்துகள் க, த, ந, ப, ம என்பனவாகும்.

## 3. இரட்டைக் காப்பியங்கள்

**பக்கங்கள் 17-18**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இளங்கோவடிகள்  2. இயல், இசை, நாடகம்
3. சேரன் செங்குட்டுவன்  4. சீத்தலைச் சாத்தனார்  5. மாதவி

**ஆ) பொருத்துக.**

1. இளங்கோவடிகள்  2. 10 காதைகள்  3. மாணிக்கப் பரல்கள்
4. முத்துப் பரல்கள்  5. சீத்தலைச் சாத்தனார்

**இ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி ஆகிய ஐந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

2. சிலப்பதிகாரம் – பெயர்க்காரணம் எழுதுக.
சிலப்பதிகாரம் = சிலம்பு + அதிகாரம். சிலம்பை மையமாகக் கொண்ட கதை என்பதால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

3. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
   - அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
   - உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
   - ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

4. மணிமேகலை – காப்பிய அமைப்பை எழுதுக.
இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை, சிலப்பதிகாரத்தைப் போன்றே முப்பது காதைகளையுடையது. ஆனால், காண்டங்களாகப் பிரிக்கப்படவில்லை.

5. “அமுத சுரபி” என்பது யாது?
“அமுத சுரபி” என்பது அள்ள அள்ளக் குறையாமல் உணவு தரும் அட்சய பாத்திரம் ஆகும்.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. இளங்்கோவடிகள் – குறிப்பு எழுதுக.

   இளங்கோவடிகள் புகழ்பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனின் தம்பி ஆவார். இவர் அரச வாழ்வை விடுத்து துறவறத்தை மேற்கொண்டார். சேரன் செங்குட்டுவனுடன் மலைவளம் காண சென்றபோது, சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவரின் வாயிலாக கண்ணகியைப் பற்றி அறிந்து கொண்டார். கண்ணகியின் கற்பின் மகத்துவத்தையும், பாண்டிய மன்னனின் நேர்மை, நீதி தவறாமையையும் எண்ணி வியந்தார். சிலப்பதிகாரத்தை மூவேந்தர்களுக்குரிய தமிழின் மிகச் சிறந்த காவியமாக இயற்றினார்.

2. சிலப்பதிகாரத்தின் காப்பிய அமைப்பை விவரி.

   சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி மற்றும் ஆடலரசி மாதவி ஆகியோரின் வரலாற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது. இந்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவை மூன்றும் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளின் தொகுப்பாகும். காவிரி, வைகை போன்ற ஆறுகளைப் பற்றியும், பூம்புகார், மதுரை, வஞ்சி, உறந்தை போன்ற நகரங்களைப் பற்றியும் சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இதில் கானல் வரி, வேட்டுவ வரி, ஊசல் வரி, கண்புகுவரி போன்ற இசைப் பாட்டுகளும் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களும், முப்பது காதைகளும் உள்ளன.

   - புகார்க் காண்டம் (10 காதைகள்)
   - மதுரைக் காண்டம் (13 காதைகள்)
   - வஞ்சிக் காண்டம் (7 காதைகள்)

3. சிலப்பதிகாரத்தின் கதைச் சுருக்கத்தை எழுதுக.

   காவிரிப்பூம்பட்டினத்தின் பெரும் வணிகரான மாசத்துவானின் மகன் கோவலன், மாநாய்கனின் மகளான கண்ணகியை மணந்தான். இருவரும் இன்பத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது கலைகளின் மேல் ஆர்வம் கொண்ட கோவலன் ஆடற்கலையில் சிறந்து விளங்கிய மாதவியின் மீது காதல் கொண்டு, தனது செல்வங்களை இழந்தான். பின்னர் தனது தவறை உணர்ந்து மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் வந்தான். தனது தவறுகளுக்கு கண்ணகியிடம் மன்னிப்பு வேண்டினான். கண்ணகியை அழைத்துக்கொண்டு வணிகம் செய்வதற்காக மதுரையை நோக்கிச் சென்றான்.

   வணிகம் செய்ய கண்ணகி தனது காற்சிலம்பு ஒன்றை கோவலனிடம் கொடுத்தாள். கோவலன் அரண்மனை பொற்கொல்லனிடம்

சிலம்பைக் காட்ட, அவன் ஏற்கனவே அரசியின் முத்துகளால் ஆன சிலம்பை திருடியதை மறைக்க கோவலன் மீது பொய் பழி சுமத்துகிறான். இதன் உண்மையை விசாரிக்காமல் பாண்டிய மன்னன் கோவலனை கொலை செய்ய ஆணையிடுகிறான். கண்ணகி, பாண்டிய மன்னனின் அரசவைக்குச் சென்று நீதி கேட்டாள். தான் கொடுத்து அனுப்பியது மாணிக்கப் பரல்களைக் கொண்ட சிலம்பு என உடைத்துக் காட்டினாள். பொற்கொல்லனின் பேச்சைக் கேட்டு தவறான நீதி வழங்கியதை அறிந்த பாண்டிய மன்னன் மயங்கி விழுந்து இறந்து போனான். இதைக்கண்ட பாண்டிய மன்னனின் மனைவியும் மயங்கி இறந்து போனாள். கோபம் தணியாத கண்ணகி தன் கணவனுக்கு அநீதி இழைத்த மதுரை மாநகர் தீக்கிரையாகட்டும் என சாபமிட்டாள். பின்னர், சேர நாட்டின் ஒரு பகுதியான “இடுக்கி” என்ற மலைப்பகுதியை அடைந்தாள். அதன் பிறகு ஒரு முழுமதி நாளில் கோவலன் பறக்கும் ரதத்தில் வந்து கண்ணகியை சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றான்.

4. சீத்தலைச் சாத்தனார் – குறிப்பு எழுதுக.

சங்க காலப் புலவர்களில் ஒருவர் சீத்தலைச் சாத்தனார். இவர் மணிமேகலை என்னும் காப்பியத்தை இயற்றியவர் ஆவார். இவர் மதுரையில் கூல வாணிகம் செய்து வாழ்ந்து வந்தார். எனவே, இவருக்கு “மதுரை கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்” என்ற பெயரும் உண்டு. சீத்தலை என்பது அவர் பிறந்த ஊர் ஆகும். இவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் இயற்றிய “மணிமேகலை” புத்த சமயக் கொள்கைகளைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூலாகும். இளங்கோவடிகளும் இவரும் நெருங்கிய நண்பர்கள். இவரை “நன்னூற் புலவன்”, “தண்டமிழ்ச் சாத்தன்” என்றும் போற்றிப் புகழ்ந்தனர்.

5. மணிமேகலையின் கதைச் சுருக்கத்தை எழுதுக.

கோவலன் மற்றும் மாதவியின் மகளே மணிமேகலை. கோவலன் மற்றும் கண்ணகிக்கு நிகழ்ந்தவற்றைப் பற்றி கேள்வியுற்ற மாதவி மிகுந்த கவலை அடைந்தாள். பிறகு, புத்த நெறியைத் தழுவி, துறவு பூண்டு, தனது மகளையும் புத்தத் துறவியாக்கினாள். மணிமேகலையை கண்ட சோழ இளவரசன் உதயகுமரன் அவளின் அழகில் மயங்கிப் பின்தொடர்கிறான். உதயகுமரனிடமிருந்து மணிமேகலையை காப்பாற்றுவதற்காக, மணிமேகலா தெய்வம் “மணிபல்லவம்” என்ற தீவிற்கு மணிமேகலையை தூக்கிச் சென்றது.

அந்தத் தீவில் “அமுத சுரபி” என்னும் அள்ள அள்ளக் குறையாமல் உணவு தரும் அட்சய பாத்திரத்தை மணிமேகலை பெற்றாள். அதன்

உதவியுடன் பூம்புகாரில் தனது அறப்பணியைத் தொடர்ந்தாள். உதயகுமரன் மணிமேகலையிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியதால், அவனிடமிருந்து தப்ப "காயசண்டிகை" என்ற கந்தருவப் பெண் வடிவம் கொள்கிறாள். அதே சமயம், காயசண்டிகையின் கணவன் காஞ்சனன், தன் மனைவியைத் தேடி புகார் நகரத்திற்கு வருகிறான். அவனுக்கும் உதயகுமரனுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில், உதயகுமரனை காஞ்சனன் வெட்டி வீழ்த்தினான். தனது மகன் இறந்ததற்கு மணிமேகலை தான் காரணம் என்றெண்ணி, அவளை பல கொடுமைகளுக்கு உள்ளாக்கினாள் உதயகுமரனின் தாய். இறுதியாக, மணிமேகலை அவளைத் திருத்தி அறத்தை எடுத்துரைத்து, தன்னைப் பின்பற்ற செய்தாள். மணிமேகலையின் மறைவிற்குப் பின்னர் மக்கள் அவளை தெய்வமாகப் போற்றி வழிபட்டனர்.

## 4. தமிழ் எழுத்துகள்

**பக்கம் 21**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இலக்கணம் 2. ஐந்து 3. குறில் 4. உடல் 5. 216

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. மொழி என்றால் என்ன?
மொழி என்பது ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி ஆகும். நாம் அறிந்த ஒரு கருத்தைப் பிறருக்குக் கூறவும், பிறர் கூறும் கருத்தை நாம் புரிந்து கொள்ளவும் நமக்கு ஒரு கருவியாக இருப்பது மொழியாகும்.

2. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம் மற்றும் அணி இலக்கணம்.

3. எழுத்து என்றால் என்ன?
ஒலி வடிவமாக ஒலிக்கப்படுவதும், வரி வடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படும்.

4. எழுத்து வடிவத்தின் வகைகள் யாவை?
ஒலி வடிவம், வரி வடிவம் என்பன எழுத்து வடிவத்தின் வகைகள் ஆகும்.

5. உயிர் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

6. உயிரெழுத்துகளின் வகைகளை எழுதுக.
உயிர் எழுத்துகள் குறில் எழுத்துகள், நெடில் எழுத்துகள் என இரு வகைப்படும்.

7. மெய்யெழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?
மெய் என்றால் உடல் என்று பொருள். தமிழ் மொழிக்கு உடலாக இருப்பது மெய் எழுத்துகள். இந்த எழுத்துகளை ஒலிப்பதற்கு நம் உடலின் இயக்கம் இன்றியமையாததாகும். 'க்' முதல் 'ன்' வரை பதினெட்டு எழுத்துகளும் மெய் எழுத்துகள் ஆகும். அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

8. வல்லின, மெல்லின மற்றும் இடையின எழுத்துகளைப் பட்டியலிடுக.
வல்லினம் : க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் : ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் : ய், ர், ல், வ், ழ், ள்

9. மாத்திரை என்றால் என்ன?
தமிழ் மொழியிலுள்ள எழுத்துகளை ஒலிப்பதற்கு ஆகும் கால அளவு மாத்திரை எனப்படும்.

10. தமிழ் எழுத்துகளுக்கு உரிய மாத்திரை அளவைப் பட்டியலிட்டுக் காட்டுக.
குறில் எழுத்துகள் – ஒரு மாத்திரை
நெடில் எழுத்துகள் – இரண்டு மாத்திரைகள்
மெய் எழுத்துகள் – அரை மாத்திரை
ஆய்த எழுத்து – அரை மாத்திரை

## 5. கனவு மாளிகை

**பக்கம் 28**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. மகிழ்ச்சி 2. மாலை 3. பொய் 4. அறிவுடையார் 5. சரி

**ஆ) பிரித்து எழுதுக.**

1. கடமை + ஆகும் 2. சரி + இல்லை 3. கவலை + இல்லாமல்
4. தலை + சிறந்த 5. உண்மை + இல்லாத

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. கிருஷ்ணதேவராயர் கண்ட கனவு யாது?
கிருஷ்ணதேவராயர் ஓர் அழகான மாளிகை ஒன்றை தனது கனவில் கண்டார். அந்த மாளிகையின் சுவர்களில் ஏராளமான இரத்தினக் கற்களும், வைரக் கற்களும் பொருத்தப்பட்டு இருந்தன.

மேலும், அங்கு ஓர் அழகான பூந்தோட்டம் இருந்ததாகவும், அந்தத் தோட்டத்தில் ஏராளமான அரிய மலர்கள் பல வண்ணங்களில் பூத்துக் குலுங்கியதாகவும் கிருஷ்ணதேவராயர் கூறினார்.

2. ராஜகுரு கிருஷ்ணதேவராயருக்கு கூறிய அறிவுரை யாது?
கிருஷ்ணதேவராயர் கண்டது ஒரு புனிதமான கனவு எனவும், அது கடவுள் அவருக்கு வழங்கிய கடமை எனவும் கூறினார். மேலும், அதுபோன்ற ஒரு மாளிகையை உடனடியாகக் கட்டி கடவுளின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் எனவும் ராஜகுரு அறிவுரை வழங்கினார்.

3. ராஜகுருவின் திட்டம் என்ன?
கிருஷ்ணதேவராயர் கனவில் கண்டது போலவே ஓர் அழகான மாளிகையை கட்டித் தருவதாக கூறி, அரண்மனை கஜானாவிலிருந்து முடிந்த அளவு பணத்தை கொள்ளையடிக்க வேண்டும் என்பதே ராஜகுருவின் திட்டம் ஆகும்.

4. கிருஷ்ணதேவராயருக்கு உண்மையை உணர்த்த தெனாலி ராமன் என்ன செய்தான்?
கிருஷ்ணதேவராயருக்கு உண்மையை உணர்த்துவதற்காக தெனாலி ராமன் ஓர் ஏழை முதியவர் போல வேடமிட்டு அரசவைக்கு வந்தான்.

5. தெனாலிராமன் அரசனுக்குரிய குணமாகக் கூறியதை எழுதுக.
உண்மையான அரசன் எந்தவொரு பொருளுக்கும் ஆசைப்படாமல், மக்களின் அமைதியான வாழ்விற்கு வழிகாட்ட வேண்டும். இதுவே ஓர் அரசனுக்குரிய குணம் என தெனாலி ராமன் கூறினான்.

## 6. நாலடியார்

**பக்கம் 31**

**அ) பிரித்து எழுதுக.**

1. ஓதுவது + எல்லாம் 2. கேடு + இல்லை 3. மற்று + அல்ல

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. கற்றது 2. மறுமை 3. நிறைவு 4. நன்மை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. வீணான சலசலப்பு என 'நாலடியார்' கூறுவது எதனை?
எல்லையற்ற கல்விகளுக்குள்ளே மெய்ஞ்ஞான நூல்களைக் கற்காமல் விட்டுவிட்டு, வெறும் உலக அறிவை மட்டும் தரும் நூல்களைக் கற்பதெல்லாம் 'கலகல' என்னும் வீணான சலசலப்பு என நாலடியார் கூறுகிறது.

2. இவ்வுலக அறியாமையைப் போக்கும் மருந்து எது? ஏன்?
கல்வியே இவ்வுலக அறியாமையை போக்கும் மருந்து ஆகும். கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும். பிறர்க்குத் தருவதால் ஒருபோதும் குறைந்து விடாது. கற்றவர் புகழை உலகெங்கும் பரவச் செய்யும். தாம் உயிரோடு இருக்கும் வரை அழியாத செல்வமாக நிலைத்திருக்கும்.

3. ஒருவன் தன் மட்கட்குச் சேர்த்து வைக்கத் தகுந்த செல்வம் யாது?
ஒருவன் தன் மட்கட்குச் சேர்த்து வைக்கத் தகுந்த செல்வம் கல்வி ஒன்றே ஆகும்.

4. நாலடியார் – சிறு குறிப்பு எழுதுக.
நாலடியார் = நான்கு + அடி + ஆர். இந்நூல் நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இதில் மொத்தமாக 400 பாடல்கள் உள்ளன. இந்நூலிற்கு "நாலடி நானூறு", "வேளாண் வேதம்" என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. இந்நூல் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகளை உடையது. நாலடியார் சமண முனிவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாகும். இந்நூலை முப்பாலாக பகுத்தவர் தருமர்; தொகுத்து அதிகாரம் வகுத்தவர் பதுமனார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார் ஆகும். இந்நூலை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலில் மொத்தம் 40 அதிகாரங்களும், 12 இயல்களும் உள்ளன.

## 7. திருக்குறள்

**பக்கம் 34**

### அ) பிரித்து எழுதுக.

1. தீது + ஒரீஇ  2. மெய் + பொருள்  3. எல்லாம் + உடையார்
4. அறிவு + இலார்  5. ஆவது + அறிவார்

### ஆ) எதிர்ச்சொல் எழுதுக.

1. அறிவிலார்  2. பொய்  3. நன்று  4. கூம்பல்  5. அஞ்சாமை

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. பகைவரால் அழிக்க முடியாத அரண் எது?
பகைவரால் அழிக்க முடியாத அரணாக விளங்குவது அறிவு ஒன்றே ஆகும்.

2. "எப்பொருள்" எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
எந்தக் கருத்தை யார் கூறக் கேட்டாலும், அக்கருத்தின் உண்மையானப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

3. ‘‘நுண்பொருள் காண்ப தறிவு’’ – விளக்குக.
அரிய கருத்துகளை பிறர்க்கு விளங்குமாறு எளிமையாக சொல்லி, பிறர் கூறும் கருத்தின் நுட்பமானப் பொருளையும் ஆராய்ந்து அறிவதே அறிவாகும்.

4. அஞ்சுவது யாரின் செயல்? ஏன்?
அஞ்சுவது அறிவுடையவரின் செயலாகும். அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்.

5. யார் எல்லாம் உடையவர்? யார் ஏதும் இல்லாதவர்?
ஏதும் இல்லாதிருப்பினும் அறிவுடையவர் எல்லாம் உடையவர். அறிவில்லாதவர் எதைப் பெற்றவராக இருந்தாலும், ஒன்றும் இல்லாதவர்.

## 8. நூலகம்

**பக்கங்கள் 38-39**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கல்விச் செல்வம் 2. நூல் 3. போட்லியன்
4. அறிவு 5. 1948

**ஆ) பொருத்துக.**

1. பாப்பிரசு உருளைகள் 2. போட்லியன் 3. காப்புத் தொகை
4. 1950 5. நவம்பர்

**இ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. புத்தகம் – பெயர்க்காரணம் எழுதுக.
காகிதத்தை கண்டுபிடிப்பதற்கு முன்பாக மக்கள் தங்களின் எண்ணங்களை பனையோலைகளில் எழுதினார்கள். அவ்வாறு எழுதப்பட்ட பனையோலைகளைத் துளையிட்டு நூல் கயிறுகளில் கோர்த்து வைத்தனர். பொத்துக் கோர்த்து வைத்ததால் அவற்றை ‘‘பொத்தகம்’’ என்று அழைத்தனர். அதுவே நாளடைவில் மருவி ‘‘புத்தகம்’’ என்னும் பெயர் பெற்றது.

2. நூலகம் என்றால் என்ன?
பல நூல்கள் தொகுத்து வைக்கப்பட்ட இடமே நூலகம் ஆகும். நூலகம் என்பது நமது அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் ஓர் இடமாகும். இங்கே பழங்கால இலக்கியங்கள், வரலாற்று நூல்கள், சுயசரிதைகள், சிறுகதைகள், பொது அறிவு நூல்கள், நீதி நூல்கள், செய்தித்தாள்கள், வார மற்றும் மாத இதழ்கள் போன்ற பல வகையான நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

3. நூலகத்தின் வகைகள் யாவை?
பொது நூலகம், தனியார் நூலகம், பள்ளி நூலகம், கல்லூரி நூலகம், பல்கலைக்கழக நூலகம், ஆராய்ச்சி நூலகம், நடமாடும் நூலகம் என்பன நூலகத்தின் வகைகள் ஆகும்.

4. நவீன நூலக அமைப்பின் முன்மாதிரி எது?
கி.மு. 300 ஆம் நூற்றாண்டில் சுமார் ஏழு இலட்சம் பாப்பிரசு உருளைகளைக் கொண்டு எகிப்திய மக்களால் அலெக்சாண்டிரியாவில் அமைக்கப்பட்ட கருவூலமே நவீன நூலக அமைப்பின் முன்மாதிரி ஆகும்.

5. இந்தியாவில் நூலகச் சட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது?
நமது இந்திய நாட்டில் 1948 ஆம் ஆண்டு நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. நூலகம் – குறிப்பு வரைக.
பல நூல்கள் தொகுத்து வைக்கப்பட்ட இடமே நூலகம் ஆகும். நூலகம் என்பது நமது அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் ஓர் இடமாகும். இங்கே பழங்கால இலக்கியங்கள், வரலாற்று நூல்கள், சுயசரிதைகள், சிறுகதைகள், பொது அறிவு நூல்கள், நீதி நூல்கள், செய்தித்தாள்கள், வார மற்றும் மாத இதழ்கள் போன்ற பலவகையான நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

2. நூலகத்தின் அமைப்பை விவரி.
ஒரு நூலகம் என்பது அனைவரும் எளிதில் சென்று படிப்பதற்கு ஏற்ற இடத்தில் அமைந்திருக்க வேண்டும். நூலகம் அமைந்துள்ள இடம் அமைதியானதாக இருக்க வேண்டும். வாசகர்கள் படிப்பதற்கு ஏற்ற இருக்கைகள், காற்றோட்டம், வெளிச்சம் போன்றவை அவசியமானதாகும். நூல்களை எளிதில் அடையாளம் காண நூல் பட்டியலும், அதற்கேற்ற வகையில் நூல்களும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. நூலகம் உருவான விதம் பற்றி எழுதுக.
ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள், தங்களின் எண்ணங்களை களிமண் தகடுகளில் எழுதி பின்பு சூளையிலிட்டு சுட்டு கோயில், அரண்மனை போன்ற இடங்களில் பாதுகாத்து வந்தனர். இதுவே பின்னர் நூலகம் உருவாகக் காரணமாக அமைந்தது என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கி.மு. 300 ஆம் நூற்றாண்டில் சுமார் ஏழு இலட்சம் பாப்பிரசு உருளைகளைக் கொண்டு எகிப்திய மக்களால்

அலெக்சாண்டிரியாவில் அமைக்கப்பட்ட கருவூலமே நவீன நூலக அமைப்பின் முன்மாதிரியாக விளங்குகிறது.

4. நூலகத்தைப் பயன்படுத்தும் வழிமுறைகள் யாவை?
நூலகத்திலுள்ள நூல்களைப் படிக்கவும், இரவல் பெறவும் அந்நூலகத்தின் உறுப்பினராக வேண்டும். உறுப்பினருக்குரிய காப்புத் தொகையை செலுத்தி அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளலாம். வருடத்திற்கு ஒருமுறை தங்களின் அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இரவல் பெற்ற புத்தகங்களை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும். நூலகத்தில் அமைதியாக இருக்க வேண்டும். நூல்களை எடுத்த இடத்திலேயே மீண்டும் வைக்க வேண்டும். நூல்களில் எழுதுகோலைக் கொண்டு குறிக்கவோ, எழுதவோ கூடாது. மேலும் நூல்களின் பக்கங்களை மடக்காமலும், கிழிக்காமலும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. நூலகத்தின் பயன்களை எழுதுக.
நூலகம் என்பது புகழ்பெற்ற பல அறிஞர்களின் உயரிய சிந்தனைகள் வாழும் இடம் ஆகும். நூலகங்கள் நமது ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் மாற்றவும், அறிவை வளர்த்துக் கொள்ளவும் பெரும் உதவி புரிகின்றன. நமது மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கான அமைதியான சூழலை உருவாக்குகின்றன. இதனால் புத்தகங்களை ஆழ்ந்து படித்து அவைக் கூறும் கருத்துகளை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். நல்ல புத்தகங்களைத் தேடிப் படிப்பதால் நமது அறிவு பெருகும்; சிந்தனைகள் பிறக்கும்; நேர்மையான எண்ணங்கள் தோன்றி ஆற்றல் பெருகும்; திறமைகள் வளரும்; மனச் சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும்; எதிர்கால முடிவுகளை எடுக்க உதவும். மனித வாழ்விற்கு நல்ல நண்பனாகவும், வழிகாட்டுபவனாகவும் இருப்பது புத்தகங்களே ஆகும்.

## 9. அளபெடை

**பக்கம் 42**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இரண்டு  2. முதல், இடை, கடை  3. மூன்று
4. இன்னிசை அளபெடை  5. விருப்பம்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அளபெடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
ஒரு செய்யுளில் ஓசை குறையும்போது அந்த இடத்திலுள்ள எழுத்தோடு அதன் இணை எழுத்தையும் சேர்த்து ஓசையை நிறைவு

செய்வதே அளபெடை எனப்படும். உயிரளபெடை, ஒற்றளபெடை என்பன அளபெடையின் வகைகள் ஆகும்.

2. உயிரளபெடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

உயிர் எழுத்துகளில் நெட்டெழுத்துகள் ஏழும் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதே உயிரளபெடை ஆகும். செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்பன உயிரளபெடையின் வகைகள் ஆகும்.

3. செய்யுளிசை அளபெடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஒரு செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய சொல்லின் முதலில், இடையில், இறுதியில் உயிர் நெடில் எழுத்துகள் அளபெடுத்து வருவது செய்யுளிசை அளபெடை ஆகும். இதற்கு இசை நிறை அளபெடை என்ற பெயரும் உண்டு. "இ" என்ற உயிரெழுத்தை தவிர மற்ற உயிரெழுத்துகள் அச்சொல்லில் இருக்கும்.

எ.கா. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

இக்குறட்பாவில் வெண்பாவின் முதற்சீர் ஓரசைச்சீராக வருதல் ஏற்புடையதாகாது என்பதால், அச்சீர் ஈரசையாகும் பொருட்டு நெடில் அளபெடுத்து வந்துள்ளது.

4. இன்னிசை அளபெடை என்றால் என்ன?

ஒரு செய்யுளில் ஓசை குறையாதபோதும் செவிக்கு இனிய ஓசை தரும் பொருட்டு, உயிர் குறில் நெடிலாகி அளபெடுத்து வருவதே இன்னிசை அளபெடை ஆகும்.

எ.கா. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இக்குறட்பாவில் ஓசைக் குறைபாடு எதுவும் இல்லாவிடினும் இனிய இசை கருதிக் கெடுப்பதும், எடுப்பதும் என்ற சொற்கள் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இனிய ஓசைக்காக அளபெடுத்து வந்துள்ளன.

5. சொல்லிசை அளபெடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஒரு செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல்லை வினையெச்ச சொல்லாக மாற்றும் பொருட்டு அளபெடுத்து வருவதே சொல்லிசை அளபெடை ஆகும். "இ" என்ற உயிரெழுத்தில் முடிந்தால் அது சொல்லிசை அளபெடை ஆகும்.

எ.கா. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

இக்குறட்பாவில் வரும் நசை என்பதன் பொருள் விருப்பம். அதனை

நசைஇ என்ற அளபெடையாக மாற்றும்போது விருப்பம் என்ற பெயர்ச்சொல்லானது, விரும்பி எனும் வினையெச்சமாக மாற்றம் பெற்று வரும்.

6. ஒற்றளபெடை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஒரு செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்யும் பொருட்டு சொல்லில் மெய்யெழுத்துகள் அளபெடுத்து வருவது ஒற்றளபெடை ஆகும். இதில் ஆய்த எழுத்தும் அளபெடுத்து வரும். ஒற்றளபெடை மொழிக்கு இடையில் மட்டுமே வரும்.

- ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள் ஆகிய பத்து மெய் எழுத்துகளும், ஆய்த எழுத்தும் இரட்டித்து வந்து அளபெடுக்கும்.
- வல்லின எழுத்துகள் க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறும், இடையின எழுத்துகள் ர், ழ் ஆகிய இரண்டும் அளபெடுக்காது.
  எ.கா. சங்ங்கு, பஞ்ஞ்சு, எஃஃகு

## 10. நன்றி மறப்பது நன்றன்று!

**பக்கம் 47**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சிறிய 2. பகல் 3. அநியாயம் 4. பகைவன் 5. செயற்கை

**ஆ) பிரித்து எழுதுக.**

1. மரம் + கூண்டு 2. நியாயம் + இல்லை 3. அளிப்பது + இல்லை
4. நன்றி + உணர்வு 5. தவறு + அல்ல

**இ) சேர்த்து எழுதுக.**

1. உடல்நிலை 2. அடைப்பட்டு 3. பொறுமையிழந்த
4. ஆட்டுக்குட்டி 5. வீணடி

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. கூண்டினுள் அடைபட்டுக் கிடந்தது யார்? ஏன்?

கூண்டினுள் அடைபட்டுக் கிடந்தது ஒரு புலி ஆகும். அது இரவு நேரங்களில் ஊரிலுள்ள ஆட்டுக் குட்டிகளைத் திருடி தின்றதால் மக்கள் அந்தப் புலியை மரக்கூண்டின் உதவியுடன் பிடித்தனர்.

2. ராமனிடம் புலி உதவி கேட்டபோது என்ன கூறியது?

ராமனிடம் உதவி கேட்ட புலி, அவனை ஒன்றும் செய்து விடாது எனவும், அது மிகுந்த தாகத்தில் இருப்பதாகவும், தண்ணீர் குடித்தவுடன் மீண்டும் கூண்டிற்குள்ளேயே திரும்பி சென்றுவிடுவதாகவும் கூறியது.

3. கழுதை மனிதர்களைப் பற்றி என்ன கூறியது?
மனிதர்கள் கழுதைகளின் மீது அதிக கனமுள்ள மூட்டைகளை ஏற்றி சுமக்க வைப்பதாக கூறியது. நாள் முழுவதும் வெயிலிலேயே கட்டிப் போட்டு, சரியான உணவை கூட அளிப்பதில்லை என குற்றம் சாட்டியது. மேலும் உடல்நிலை சரியில்லை என்றால் கூட அடித்து வேலை வாங்குவதாகவும், மனிதர்கள் நன்றியுணர்வு இல்லாதவர்கள் எனவும் கூறியது. பின்னர் இத்தகைய கொடூர எண்ணம் கொண்ட மனிதர்களில் ஒருவனை கொல்வது எவ்விதத்திலும் தவறல்ல என புலியிடம் கழுதை கூறியது.

4. மனிதர்களைப் பற்றி குதிரை கூறியது என்ன?
காட்டில் சுதந்திரமாக அலைந்து திரிந்த தன்னை மனிதன் ஒருவன் பிடித்து சென்று அடிமைப்படுத்தி கொடுமைப்படுத்தியதாகவும், தன்னை வண்டி இழுப்பதற்காகப் பயன்படுத்திக்கொண்டதாகவும் குதிரை வருத்தத்துடன் கூறியது. வயதாகிவிட்ட காரணத்தால் தன்னால் முன்புபோல வண்டி இழுக்க முடியாததால், தனது முதலாளியால் வெறுத்து ஒதுக்கப் பட்டதாக கூறியது. தனக்கு உணவும் தண்ணீரும் கிடைக்காததால் உயிர் வாழ்வதற்கே மிகுந்த சிரமப்படுவதாக கூறி வருத்தப்பட்டது அந்தக் குதிரை. மேலும், மனிதர்கள் அனைவரும் கொடூரமானவர்கள் என்றும், அவர்களை கொல்வதே சரியானது என்றும் புலியிடம் குதிரை கூறியது.

5. ராமனை புலியிடமிருந்து விடுவித்தது யார்? எப்படி?
ராமனை புலியிடமிருந்து விடுவித்தது அவனது தோழி இன்பா. இன்பா ராமனை காப்பாற்றும் பொருட்டு, புலியிடம் நிறைய கேள்விகளை கேட்டாள். பின்னர் புலி மரக்கூண்டினுள் எவ்வாறு அடைபட்டு கிடந்தது என்பதை பார்க்க விரும்புவதாக கூறி, புலியை கூண்டினுள்ளே செல்லுமாறு கூறினாள். புலியும் இன்பாவின் பேச்சைக் கேட்டு கூண்டினுள்ளே சென்றது. உடனே, மரக்கூண்டின் கதவுகளை பூட்டுமாறு ராமனுக்கு கண்களின் மூலம் செய்கை காட்டினாள். ராமனும் கதவுகளை பூட்டி விட்டான். இவ்வாறே இன்பா ராமனை புலியிடமிருந்து காப்பாற்றினாள்.

## 11. மயிலுக்குப் போர்வை

**பக்கம் 50**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. செயற்கை
2. துன்பம்
3. தாழ்ந்த
4. வெப்பம்
5. துணிச்சல்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரசன் எங்கு சென்றான்?
அரசன் இயற்கை அழகினையும், உயர்ந்த மலைகளையும் கண்டு மகிழ்ந்திட மலைவளம் காணச் சென்றான்.

2. அரசன் மலைவளம் கண்டு வருகையில் என்ன நிகழ்ந்தது?
அரசன் மலைவளம் கண்டு வருகையில் மழை பெய்யத் தொடங்கியது.

3. மேகங்கள் கூடியதைக் கண்ட மயில் என்ன செய்தது?
மேகங்கள் கூடியதைக் கண்ட மயில், தனது தோகையை விரித்து ஆடி, அகவிக் கொண்டிருந்தது.

4. "கொடையில் சிறந்தோன்" என்று கவிஞர் யாரைக் குறிப்பிடுகிறார்?
மயிலுக்கு போர்வை வழங்கிய பேகனை கொடையில் சிறந்தோன் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

5. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.
இனிக்கும் பாடல்கள், பாலர் பாடல், மலரும் உள்ளம், ஈசாப் கதைப் பாடல்கள், பாட்டுப் பாடுவோம், பாப்பாவுக்குப் பாட்டு, சிரிக்கும் பூக்கள், சிட்டுக் குருவி ஆகியன குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இயற்றிய நூல்கள் ஆகும்.

## 12. திருக்குறள்

**பக்கம் 54**

**அ) பிரித்து எழுதுக.**

1. விருந்து + ஓம்பி  2. தான் + உண்டல்  3. அகன் + அமர்ந்து
4. மருந்து + எனினும்  5. முகம் + திரிந்து

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. இல்வாழ்க்கை நடத்துவது ஏன்?
வீட்டில் இருந்து பொருளைச் சேர்த்தும் காத்தும் இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம், வந்த விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

2. யாருடைய வாழ்வு கெட்டுப் போகாது?
தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் பேணுபவனின் வாழ்வு வறுமைபட்டுக் கெட்டுப் போவதில்லை.

3. திருமகள் எங்கு மனம் மகிழ்ந்து குடியிருப்பாள்?
இனிய முகத்துடன் வந்த விருந்தினரை போற்றுகின்றவனுடைய வீட்டில் திருமகள் மனம் மகிழ்ந்து குடியிருப்பாள்.

4. மறுமையில் தேவர்க்கும் எவர் நல்ல விருந்தினராவார்?
வந்த விருந்தினரைப் போற்றி, இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்து இருப்பவர், மறுமையில் தேவர்க்கும் நல்ல விருந்தினர் ஆவார்.

5. ‘‘மோப்பக் குழையும் அனிச்சம்’’ என்ற குறளின் விளக்கம் தருக.
அனிச்ச மலர் முகர்ந்தவுடன் வாடிப்போகும்; அதுபோல் நம் முகம் வேறுபட்டுப் பார்த்த உடனே விருந்தினரும் வாடி நிற்பார்.

## 13. தமிழர்களின் உணவு முறைகள்

**பக்கம் 59**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. உணவையே 2. சோளம் 3. சாமை
4. இரண்டு 5. பொன்னாங்கண்ணிக் கீரை

### ஆ) எதிர்ச்சொல் எழுதுக.

1. செயற்கை 2. அதிகரிக்கும் 3. உதவாது
4. அசுத்தம் 5. வெப்பம்

### இ) சிறுவினாக்களுக்கு விடையளி.

1. சிறுதானியங்களின் பெயர்களை எழுதுக.
சோளம், கம்பு, வரகு, பனிவரகு, சாமை, தினை, குதிரைவாலி, கேழ்வரகு போன்றவை சிறுதானியங்கள் ஆகும்.

2. கம்பின் பயன்கள் என்ன?
கம்பு தமிழர்களின் முக்கிய உணவு ஆகும். கம்பங்கூழ் உடல் எடையை குறைக்கும். அரிசியைவிட எட்டு மடங்கு அதிகமான இரும்புச்சத்து இதில் உள்ளது. கண் நரம்புகளுக்கு புத்துணர்வு கொடுத்து பார்வையை தெளிவாக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டுகிறது. நமது உடல் வலுவாகவும், நலமாவும் இருக்க உதவுகிறது.

3. சாமை – குறிப்பு எழுதுக.
அரிசியை விட ஏழு மடங்கு நார்ச்சத்து கொண்டது சாமை. சாமையிலுள்ள இரும்புச்சத்து மற்ற சிறு தானியங்களில் இருப்பதைக் காட்டிலும் மிக அதிகம். நம் உடலில் தாதுப் பொருட்களை அதிகரித்து உயிரணுக்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறது. வயிற்றுக் கோளாறுக்கு நல்லதொரு மருந்தாகவும் சாமை பயன்படுகிறது.

4. முருங்கைக்கீரையின் பயன்களை எழுதுக.
முருங்கைக்கீரையில் இரும்புச்சத்து, தாமிரச்சத்து, சுண்ணாம்புச்சத்து

போன்றவை மிகுந்துள்ளன. இது உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது. இது உடல் சூட்டைத் தணிக்கும். மலச்சிக்கலை நீக்கும்; இரத்தத்திலுள்ள கொழுப்பைக் குறைக்கும்; கண் பார்வை தெளிவாகும்; பித்தத்தைப் போக்கும். வயிற்றுப்புண், தலைவலி, வாய்ப்புண் ஆகியவற்றைக் குணப்படுத்தும்.

5. மணத்தக்காளிக்கு வழங்கப்படும் மற்ற பெயர்கள் யாவை?

மிளகு தக்காளி, சுக்கட்டிக் கீரை, கருஞ்சுக்கட்டி என்பன மணத்தக்காளி கீரைக்கு வழங்கப்படும் மற்ற பெயர்கள் ஆகும்.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. பண்டையத் தமிழர்களின் உணவு முறைகள் பற்றி எழுதுக.

"உணவே மருந்து, மருந்தே உணவு" என்பது நம் பண்டையத் தமிழர்களின் கொள்கையாகும். சிறுதானியங்கள், கீரைகள், பயிறு வகைகள், காய்கறிகள், பழங்கள், கிழங்கு வகைகள் போன்ற இயற்கையான உணவுகளையே பண்டையத் தமிழர்கள் உண்டு வாழ்ந்தனர். பண்டைய தமிழர்கள் உணவையே மருந்தாகப் பயன்படுத்தினர். இதுவே தமிழர்களின் வாழ்வியல் முறையாகவும் இருந்தது. இதற்கான சான்றுகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கலித்தொகை போன்ற சங்க கால இலக்கியங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

2. சிறுதானியங்கள் – குறிப்பு வரைக.

சோளம், கம்பு, வரகு, சாமை, பனிவரகு, தினை, குதிரைவாலி, கேழ்வரகு போன்றவையே சிறுதானியங்கள் ஆகும். நமது பாரம்பரிய சிறுதானிய உணவுகள் சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு போன்ற நோய்களிலிருந்து நம்மை காத்துக் கொள்ள உதவுகின்றன. இவை நமது உடல்நலத்தை மேம்படுத்தும் ஆற்றல் கொண்டவை.

3. சோளம், வரகு, பனிவரகு ஆகியவற்றின் பயன்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

**சோளம்:** சிறுதானியங்களில் முதன்மையானது சோளம் ஆகும். இது நீரழிவு நோய், செரிமானப் பிரச்சனைகள், இரத்த சோகை, சர்க்கரை நோய் முதலியவற்றை குணப்படுத்தும். உடலிலுள்ள உப்பைக் குறைக்கும். கண் குறைபாட்டை சீர் செய்யும் "பீட்டா கரோட்டின்" சோளத்தில் அதிக அளவு உள்ளது.

**வரகு:** வரகில் உள்ள நார்ச்சத்து அரிசி, கோதுமையில் உள்ளதை விட அதிகம். அதிக அளவு புரதச்சத்து, தாது உப்புகளை கொண்டதாகவும் உள்ளது. இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்தும் உள்ளது. உடல் எடையை குறைக்கக் கூடியது.

**பனிவரகு:** நம் நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்தும். உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும். சருமத்தை மினுமினுக்கச் செய்யும். இளநரை, மூப்பை தள்ளிப்போடும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். வயதானவர்களின் நியாபக மறதியை போக்கும் வல்லமையுடையது.

4. ஏதேனும் மூன்று கீரைகளின் பெயர்களையும், அவற்றின் பயன்களையும் எழுதுக.

**கரிசலாங்கண்ணிக்கீரை:** உணவில் சேர்க்கப்படும் கீரைகளில் முதன்மையானது கரிசலாங்கண்ணிக்கீரை ஆகும். இதில் வெள்ளைப் பூ, மஞ்சள் பூ கரிசலாங்கண்ணி என இரண்டு வகைகள் உள்ளன. இந்தக் கீரையைத் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் சளித்தொல்லை நீங்கும். இது மஞ்சள் காமாலையைக் குணப்படுத்தும். மேலும், நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கும்.

**முருங்கைக்கீரை:** இக்கீரையில் இரும்புச்சத்து, தாமிரச்சத்து, சுண்ணாம்புச்சத்து மிகுந்துள்ளன. உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது. உடல் சூட்டை தணிக்கும்; மலச்சிக்கலை நீக்கும்; இரத்தத்திலுள்ள கொழுப்பைக் குறைக்கும்; கண் பார்வையை தெளிவாக்கும். பித்தத்தைப் போக்கும். வயிற்றுப்புண், தலைவலி, வாய்ப்புண் ஆகியவற்றைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது.

**சிறுகீரை:** சிறுகீரை நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்கும். கண் புரை நோயைத் தடுக்கிறது. கண் எரிச்சல், கண் கட்டி போன்றவற்றை குணப்படுத்தும். கல்லீரலை வலிமைப்படுத்தும். இரத்த சோகையை நீக்கி, குடலை சுத்திகரிக்கும். வயிறு சம்பந்தமான அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்கிறது. இதில் இரும்புச்சத்து, பொட்டாசியம், மக்னீசியம் போன்ற சத்துகள் நிரம்பியுள்ளன.

## 14. சுட்டெழுத்துகள்

**பக்கம் 62**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சுட்டெழுத்து
2. அகச்சுட்டு
3. புறச்சுட்டு
4. அண்மைச் சுட்டு
5. சேய்மைச் சுட்டு

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. சுட்டெழுத்துகள் என்றால் என்ன?

ஒரு பொருளைச் சுட்டிக் காட்டப் பயன்படும் எழுத்துகளே சுட்டெழுத்துகள் ஆகும். அ, இ, உ ஆகியன தமிழில் உள்ள

சுட்டெழுத்துகள் ஆகும். இவற்றை முச்சுட்டு என்றும் அழைப்பர். ‘‘உ’’ சுட்டெழுத்து தற்போது பயன்பாட்டில் இல்லை.

2. அகச்சுட்டு என்றால் என்ன?
சொல்லின் உள்ளேயே நின்று பொருள் தருவது அகச்சுட்டு எனப்படும். அந்தச் சுட்டெழுத்தை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தராது.

3. புறச்சுட்டை சான்றுடன் விளக்குக.
சொல்லின் வெளியே நின்று பொருள் தருவது புறச்சுட்டு எனப்படும். அந்தச் சுட்டெழுத்தை நீக்கினால் பிற எழுத்துகள் பொருளைத் தரும்.
எ.கா. அப்புத்தகம்
மேற்கண்ட எடுத்துக்காட்டில் உள்ள ‘‘அ’’ என்ற சுட்டெழுத்து ‘‘புத்தகம்’’ என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஒரே சொல் போல உள்ளது. ‘‘அப்புத்தகம்’’ என்ற சொல்லை ‘‘அ + புத்தகம்’’ என பிரித்தாலும், அது ‘‘புத்தகம்’’ என்ற பொருளைத் தருகிறது.

4. அண்மைச் சுட்டு, சேய்மைச் சுட்டு என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
**அண்மைச் சுட்டு:** அருகிலுள்ள ஒரு பொருளைச் சுட்டிக் கூறுவதே அண்மைச்சுட்டு எனப்படும். ‘‘இ’’ என்ற எழுத்தானது அருகில் உள்ளதை சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுகிறது.
எ.கா. இவன், இவள், இவர், இது
**சேய்மைச்சுட்டு:** தொலைவிலுள்ள ஒரு பொருளைச் சுட்டிக் கூறுவதே சேய்மைச்சுட்டு எனப்படும். ‘‘அ’’ என்ற எழுத்தானது தொலைவிலுள்ளதைச் சுட்டிக்காட்டப் பயன்படுகிறது.
எ.கா. அவன், அவள், அவர், அது

5. சுட்டுத் திரிபை சான்றுடன் விளக்குக.
‘‘அ, இ’’ ஆகிய சுட்டெழுத்துகள் அந்த, இந்த என தன் வடிவத்திலிருந்து திரிந்து, பொருளைச் சுட்டுவது சுட்டுத் திரிபு ஆகும்.
எ.கா. அந்தக் காட்டில், இந்தப் பெண், அந்த மரம், இந்த வீடு

## 15. மகிழ்ச்சி

**பக்கம் 65**

**அ) பிரித்து எழுதுக.**

1. விருந்து + அளி  2. ஒரு + முறை  3. வாழ் + நாள்
4. மனம் + இல்லை  5. தேவை + இல்லாத

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. வேண்டும் 2. புதிய 3. பொய் 4. இறக்கி 5. குறைவு

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரசனின் அறிவிப்பு யாது?

   தான் விருந்தளிக்கப் போவதாகவும், அந்த விருந்தில் அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்பதும் அரசனின் அறிவிப்பாகும்.

2. பிச்சைக்காரன் அரசனிடம் என்ன கேட்டான்?

   அரசர் அளிக்கும் விருந்தில் கலந்து கொள்ள விரும்புவதாக பிச்சைக்காரன் கூறினான். மேலும், தன்னிடம் அரச உடைகள் இல்லாததால் அரசனின் பழைய ஆடையை அளித்து உதவுமாறு கேட்டான்.

3. அரசர் அளித்த விருந்தில் பிச்சைக்காரன் செய்த செயல் யாது?

   அரசர் அளித்த இரவு விருந்தில் கலந்து கொண்ட பிச்சைக்காரன் அடிக்கடி கீழே விழுந்துவிடும் பழைய துணியை சேகரிக்கும் மும்முரத்தில் இருந்ததால் விருந்தை மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை. மேலும், பரிமாறப்பட்ட பதார்த்தங்களையும் அவனால் சரிவர ருசிக்க முடியவில்லை.

4. ‘‘மகிழ்ச்சி’’ எனும் கதை கூறும் வேண்டாத பொருட்கள் யாவை?

   விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை ஆகியன ‘‘மகிழ்ச்சி’’ எனும் கதை கூறும் வேண்டாத பொருட்கள் ஆகும்.

## 16. ஆறு

**பக்கம் 68**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. இறந்தேன் 2. செயற்கை 3. எழு 4. கவலை 5. கைது

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஆற்றின் பிறப்பிடம் யாது?

   ஆற்றின் பிறப்பிடம் மலை.

2. ஆறுக்கு இயற்கை அன்னை தந்த வழித்துணைகள் யாவை?

   இலைகள், சருகுகள், உதிர் பூக்கள் போன்றவை ஆறுக்கு இயற்கை அன்னை அளித்த வழித்துணைகள் ஆகும்.

3. ஆறு எதைப் போல நெளிந்து ஓடும்?

   ஆறு சாரைப் பாம்பைப் போல நெளிந்து ஓடும்.

4. ஆறு எதை அழியாமல் காக்கும்?
ஆறு உலகை அழியாமல் காத்திடும்.

5. "தன் சிரிப்பொலிகள்" என ஆறு எதனைக் குறிப்பிடுகிறது?
வானில் மேகமாய் உருவெடுத்து, உருண்டோடும் இடிகளை தனது சிரிப்பொலிகள் என ஆறு குறிப்பிடுகிறது.

## 17. சிலப்பதிகாரம்

**பக்கம் 70**

**அ) பிரித்து எழுதுக.**

1. சிலம்பு + அதிகாரம்
2. பரந்து + ஒழுகலான்
3. இமயம் + ஆயினும்
4. பழமை + குடி
5. முழுதும் + உணர்ந்தோரே

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. தூற்றுதல் 2. தனி 3. புதுமை 4. பொய் 5. பதில்

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. விரிந்த கடலை 2. அழகு, பொழிவு, பூம்புகார் 3. செல்வம்
4. ஐம்பெருங்காப்பியங்களில் 5. முப்பது

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. சிலப்பதிகாரம் – பெயர்க்காரணம் தருக.
சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். இந்நூல் சிலம்பை மையமாகக் கொண்ட கதை என்பதால் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது.

2. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்றழைக்கப்படக் காரணம் யாது?
அரசர்களையோ அல்லது தெய்வங்களையோ காவியத் தலைவனாகக் கொண்டிருக்காமல், கோவலன் என்ற ஒரு சாதாரண குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருப்பதால் சிலப்பதிகாரம் "குடிமக்கள் காப்பியம்" என்று அழைக்கப்படுகிறது.

3. இளங்கோவடிகள் – குறிப்பு வரைக.
இளங்கோவடிகள் புகழ்பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனின் தம்பி ஆவார். இவர் அரச வாழ்வை விடுத்து துறவறத்தை மேற்கொண்டார். சேரன் செங்குட்டுவனுடன் மலைவளம் காண சென்றபோது, சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவரின் வாயிலாக கண்ணகியைப் பற்றி அறிந்து கொண்டார். கண்ணகியின் கற்பின் மகத்துவத்தையும், பாண்டிய மன்னனின் நேர்மை, நீதி தவறாமையையும் எண்ணி

வியந்தார். சிலப்பதிகாரத்தை மூவேந்தர்களுக்குரிய தமிழின் மிகச் சிறந்த காவியமாக இயற்றினார்.

4. புகார் நகரம் எதைப் போல பழமை வாய்ந்தது?
பார் போற்றும் சோழனின் குலத்தைப் போல புகார் நகரம் மிகப்பெரும் பழமை வாயந்தது.

5. புகார் நகரம் எவற்றைப் போல நிலைத்து நிற்கிறது?
புகார் நகரம் பொதிய மலை, இமய மலை போல நிலைத்து நிற்கிறது.

6. மக்கள் புகாரை விட்டு நீங்காமலிருக்க காரணம் யாது?
புகார் நகரில் மிகுந்த செல்வமும், பகையின்மையும் சேர்ந்து விளங்குவதால், இந்நகரில் வாழும் மக்கள் யாரும் புகாரை விட்டு வேறு எங்கும் செல்வதில்லை

## 18. தமிழ்நாட்டின் ஆறுகள்

**பக்கங்கள் 75-76**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இ) காவிரி 2. ஈ) கல்லாறு 3. ஆ) பாலாறு
4. அ) வெள்ளிமலை 5. ஆ) தாமிரபரணி

**ஆ) பொருத்துக.**

1. வெண்ணாறு 2. வன்னியாறு 3. செய்யாறு
4. சுருளியாறு 5. மணிமுத்தாறு

**இ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. பாரதியார் போற்றும் ஆறுகளின் பெயர்களை எழுதுக.
காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி முதலியன பாரதியார் போற்றும் ஆறுகளின் பெயர்கள் ஆகும்.

2. காவிரி ஆற்றின் பிறப்பிடம் யாது?
கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மலைப் பகுதியே காவிரி ஆற்றின் பிறப்பிடமாகும்.

3. தென்பெண்ணையாற்றின் துணையாறுகளின் பெயர்களை எழுதுக.
கல்லாறு, கெடிலம் ஆறு, மார்கண்ட நதி, பாம்பாறு, வன்னியாறு ஆகியன தென்பெண்ணை ஆற்றின் துணையாறுகள் ஆகும்.

4. வைகையாற்றின் மீது கட்டப்பட்டுள்ள அணைகளின் பெயர்களை குறிப்பிடுக.
பெரியாறு அணை, வைகை அணை, சோத்துப்பாறை அணை,

மஞ்சளாறு அணை, மருதநதி அணை, சாத்தையாறு அணை ஆகியன வைகையாற்றின் மீது கட்டப்பட்டுள்ள அணைகளாகும்.

5. தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்திருக்கும் முக்கிய நகரங்கள் யாவை?

   பாபநாசம், குற்றாலம், திருச்செந்தூர், தென்காசி, கழுகுமலை, ஸ்ரீவைகுண்டம், மணப்பாடு, கிருஷ்ணாபுரம், தூத்துக்குடி, எட்டயபுரம், குலசேகரப்பட்டினம், சங்கரன்கோவில், பாஞ்சாலங்குறிச்சி ஆகியன தாமிரபரணியாற்றின் கரையில் அமைந்திருக்கும் முக்கிய தமிழக நகரங்கள் ஆகும்.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. காவிரியாற்றின் தோற்றம் பற்றி எழுதுக.

   தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகளில் முக்கியமானது காவிரி ஆறாகும். இதற்கு "தென்னாட்டு கங்கை" என்ற பெயரும் உண்டு. தமிழ் இலக்கியங்களில் காவிரி ஆற்றை பொன்னி ஆறு என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளார்கள். இதுவே தமிழ்நாட்டின் நீளமான ஆறாகும். இதன் நீளம் 805 கி.மீ. ஆகும். கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மலைப் பகுதியே இதன் பிறப்பிடமாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் 1276 மீட்டர் கடல்மட்ட உயரத்தில் அமைந்துள்ள "தலைக்காவிரி" என்ற இடத்தில் காவிரி பிறக்கிறது.

2. தென்பெண்ணை ஆறு – குறிப்பு வரைக.

   தென்னிந்திய ஆறுகளில் மிக முக்கியமானது தென்பெண்ணை ஆறு. இது கர்நாடக மாநிலத்திலுள்ள நந்தி மலைத் தொடரில் இருந்து தோன்றுகிறது. இதன் நீளம் 500 கி.மீ. ஆகும். கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 13 ஏரிகளுக்கு கால்வாய்களின் மூலம் இந்த ஆற்றின் நீர் கொண்டு செல்லப்படுகிறது. இறுதியாக தமிழ்நாட்டிலுள்ள கடலூர் அருகில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. கெடிலம் ஆறு, கல்லாறு, மார்கண்ட நதி, பாம்பாறு, வன்னியாறு ஆகியன தென்பெண்ணையாற்றின் துணை ஆறுகளாகும்.

3. பாலாற்றைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

   "தென்னிந்திய விவசாயத்தின் தாய்" என விவசாயிகளால் பாராட்டப்படுவது பாலாறு. கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்திலுள்ள நந்தி மலையில் பாலாறு உற்பத்தியாகிறது. இதன் நீளம் 348 கி.மீ. ஆகும். பாலாறு காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வயலூர் என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இதற்கு ஏழு துணையாறுகள் உள்ளன. இதில் முக்கியமானது செய்யாறு ஆகும்.

4. வைகையாற்றின் பிறப்பிடம், அணைகள் பற்றி எழுதுக.

தமிழகத்தின் நான்காவது பெரிய ஆறு வைகையாறு ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் 1626 மீட்டர் கடல்மட்ட உயரத்தில் அமைந்துள்ள மேகமலையிலுள்ள வெள்ளிமலை என்ற இடத்தில் வைகை ஆறு பிறக்கிறது. பெரியாறு அணை, வைகை அணை, சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை, மருதநதி அணை, சாத்தையாறு அணை ஆகியன வைகையாற்றின் மீது கட்டப்பட்டுள்ள அணைகளாகும்.

5. தாமிரபரணி ஆற்றைப் பற்றி குறிப்பு எழுதுக.

தமிழகத்திலுள்ள சிறப்பான ஆறுகளில் ஒன்று தாமிரபரணி. இதன் பிறப்பிடம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலுள்ள பொதிகை மலையாகும். இதன் நீளம் சுமார் 128 கி.மீ. ஆகும். பொதிகை மலையிலிருந்து உருவாகி பாண தீர்த்தம், கலியாண தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம் ஆகியவற்றைக் கடந்து பாபநாசம் வழியாகப் பாய்கிறது. தாமிரம் நிறைந்த ஆறு என்பதால் இதற்கு தாமிரபரணி என்ற பெயர் ஏற்பட்டதாக வரலாறும் உண்டு. இதற்கு ‘‘பொருநை நதி’’ என்ற பெயரும் உண்டு. மணிமுத்தாறு, பச்சையாறு, சிற்றாறு, சேர்வலாறு, காரையாறு ஆகியன இதன் துணையாறுகள் ஆகும்.

## 19. இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

**பக்கம் 78**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பெயர்ச்சொல்
2. இரண்டு
3. இடுகுறிச் சிறப்புப்பெயர்
4. இடுகுறிப் பொதுப்பெயர்
5. காரணப் பெயர்கள்

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. இடுகுறிப்பெயர் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

நம் முன்னோர்கள் எவ்வித காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்கு குறியீடாக இட்டு வழங்கிய பெயரே இடுகுறிப்பெயர் ஆகும். இது இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இரண்டு வகைப்படும்.

2. இடுகுறிப் பொதுப்பெயரைச் சான்றுடன் விளக்குக.

அனைத்திற்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர் இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும்.

எ.கா. மரம்

மரம் என்பது அனைத்து மரங்களுக்கும் பொதுவான பெயர் ஆகும்.

3. இடுகுறிச் சிறப்புப்பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு பொருளுக்கு சிறப்பாய் வந்து அதை அடையாளப்படுத்துவது இடுகுறிச் சிறப்புப்பெயர் ஆகும்.
   எ.கா. வாழை மரத்திற்கு தண்ணீர் ஊற்று.
   இத்தொடரில் 'வாழை மரம்' என்பது மரங்களில் ஒன்றைச் சிறப்பாகக் குறிப்பதால் இது இடுகுறிச் சிறப்புப்பெயராகும்.

4. காரணப்பெயரை சான்றுடன் விளக்குக.
   நம் முன்னோர்கள் ஒரு பொருளுக்குக் காரணம் கருதி இட்டு வழங்கிய பெயரே காரணப்பெயர் ஆகும். மற்ற மொழிகளில் இடுகுறிப்பெயர்களே மிகுதியாக உள்ளன. ஆனால், தமிழ் மொழியில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளன.
   எ.கா. கரும்பலகை
   கருமை நிறமாக இருப்பதால் "கரும்பலகை" என்று அழைக்கப்படுகிறது.

5. காரணப் பொதுப்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
   எல்லா வகையான பொருட்களையும், ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக பொதுவாகக் குறிப்பதே காரணப் பொதுப்பெயர் ஆகும்.
   எ.கா. பறவைகள் பறந்து சென்றன.
   இத்தொடரில் "பறவைகள்" என்னும் சொல் பறக்கும் தன்மையுடைய காகம், புறா, கிளி போன்ற அனைத்து பறவைகளையும் பொதுவாக குறிப்பதால் இது காரணப் பொதுப்பெயர் ஆகும்.

## 20. இயற்கையைக் காப்போம்!

**பக்கம் 82**

**அ) பிரித்து எழுதுக.**

1. மலை + அடிவாரம் 2. கவலை + இன்றி 3. குளம் + கரை
4. தொழில் + சாலை 5. இரை + தேடி

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. குறை 2. நுனி 3. எழுந்து 4. முடியும் 5. செயற்கை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. குளத்தில் வாழ்ந்த உயிரினங்கள் யாவை?
   மீன்கள், தவளைகள் மற்றும் பூச்சிகள் ஆகியன குளத்தில் வாழ்ந்த உயிரினங்கள் ஆகும்.

2. குளம் மாசடைந்த விதம் பற்றி எழுதுக.
   குளத்தை சுற்றி இருந்த நிலப்பகுதியில் கட்டிக்கொண்டிருந்த

தொழிற்சாலையில் வேலை செய்த பணியாளர்கள் அதிகளவில் குளத்து நீரைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். சோப்பு நுரைகள் மற்றும் அழுக்குக் கழிவுகள் போன்றவை நிரம்பியதால் குளம் மாசடைந்தது.

3. குளத்தில் வாழ்ந்த உயிரினங்கள் யாரிடம் உதவி கேட்டன? ஏன்?
குளத்தில் வாழ்ந்த உயிரினங்கள் கொக்குகள் மற்றும் நாரைகளிடம் உதவி கேட்டன. குளம் மாசடைந்து போனதால் அந்த உயிரினங்கள் மூச்சு விட முடியாமல் சிரமப் பட்டதால் தங்களின் உயிரை காப்பாற்றிக் கொள்ள நினைத்தன.

4. பறவைகள் எவ்வாறு அந்தக் குளத்தில் வாழ்ந்த உயிரினங்களுக்கு உதவி செய்தன?
ஆயிரக்கணக்கான கொக்குகள், நாரைகள், பறவைகள் அக்குளத்திலுள்ள மீன்கள், தவளைகள், பூச்சிகள் என அனைத்தையும் தங்கள் வாய்களில் கவ்விக் கொண்டு அருகிலிருந்த காட்டிலுள்ள குளத்திற்கு எடுத்துச் சென்று உதவி செய்தன.

5. ‘‘இயற்கையைக் காப்போம்’’ கதையின் நீதியை விவரி.
உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் இயற்கையைச் சார்ந்தே வாழ்கின்றன. எனவே இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து நாம் அனைவரும் அதைக் காக்க வேண்டும்.

## 21. செய்யும் தொழிலே தெய்வம்

**பக்கம் 85**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. செய்யும் தொழில் 2. பயிர்கள் 3. உணவு
4. 1930 5. மக்கள் கவிஞர்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ‘‘செய்யும் தொழிலே தெய்வம்’’ என்ற பாடலின் பொருளை எழுதுக.
நாம் செய்யும் தொழிலை தெய்வமாகவும், நமது திறமைகளை செல்வமாகவும் கொண்டு எந்தச் செயலையும் செய்திடல் வேண்டும். கைகளும், கால்களுமே நமக்கு உதவி ஆகும். செய்யும் கடமையே நமக்குக் கொடுக்கப்பட்ட பதவியாகும். வெயிலில் வியர்வைத் துளிகளை சிந்தி பயிர்களை வளர்த்திடுவோம். அந்தப் பயிர்களே நமக்கு பல பலன்களைத் தரும். மேலும் உணவாக மாறி நம் உயிரையும் காக்கும். தினமும் ஓய்வில்லாமல் உழைத்திடுவோம். எதிர்காலம் சிறக்கும் என நம்பிடுவோம். காயும் ஒரு நாள் கனியாக மாறும். அதைப்போலவே, நம் கனவும் ஒரு நாள்

நிறைவேறும். வாழ்க்கையில் எத்தகைய துன்பம் வந்தாலும், பசியால் வாடினாலும், நேர்மை தவறாமல் நல்வழியில் நடப்போம்.

2. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் – குறிப்பு வரைக.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகிலுள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது பெற்றோர் அருணாச்சலம், விசாலாட்சி அம்மையார். இவர் சிறுவயதிலிருந்தே கவி பாடுவதில் அதிக ஆர்வம் காட்டினார். மேலும், உணர்ச்சி மிகு பாடல்களை பாடுவதில் தலைசிறந்தவர். இவர் பாட்டாளி மக்களின் வாழ்க்கையை எளிய தமிழில் பாடல்களாக எழுதி வெளியிட்டார். இவருக்கு “மக்கள் கவிஞர்” என்ற சிறப்புப் பெயரும் உண்டு. எளிய கவிதைகளையும், திரைப்படப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இத்தகைய புகழ்மிக்க பட்டுக்கோட்டையார் 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## 22. அறிவியல் மேதைகள்

**பக்கங்கள் 89-90**

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அ) 1893 2. ஆ) 1945 3. ஈ) லண்டன்

4. ஆ) இயற்பியல் 5. இ) பாரத ரத்னா

### ஆ) பொருத்துக.

1. டீசல் மோட்டார் 2. பெனிசிலின் 3. மின்சார மோட்டார்

4. ரேடியம் 5. இராமன் விளைவு

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. ருடால்ப் டீசல் கண்டுபிடித்த இயந்திரம் பற்றி குறிப்பு வரைக.

டீசல் இயந்திரத்தை கண்டுபிடித்தவர் ருடால்ப். தனது கற்பனையில் உருவாக்கிய இயந்திரத்தை வரைபடமாகத் தீட்டினார். குரூர் என்ற செல்வந்தர் இயந்திரம் தயாரிக்கும் செலவினை ஏற்றுக் கொண்டார். அவரின் உதவியால் 1893 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் டீசல் இயந்திரத்தை உருவாக்கினார். அதற்கு பின்பு அந்த இயந்திரம் “டீசல் மோட்டார்” என்ற பெயரோடு உருவாக்கப்பட்டது. அது 25 குதிரை சக்தி மிக்க இயந்திரமாக அமைந்தது.

2. பெனிசிலின் மருந்து கண்டுபிடிக்கப்பட்ட விதத்தினை விவரி.

பெனிசிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர் அலெக்சாண்டர் ஃபிளமிங். தனது ஆய்வுக் கூடத்தில் நோய் நுண்ணுயிரிகளை

வளர்த்திருந்தார். காற்றுப் பரவி பூஞ்சைக் காளானால் அவை சிதைந்திருந்தன. இதைப் பார்த்தவுடன் பூஞ்சைக் காளான், நோய் நுண்ணுயிரிகளின் வளர்ச்சியைத் தடுக்கும் ஒரு பொருளை வெளிப்படுத்துகிறது என்பதை ஃபிளமிங் கண்டறிந்தார். பின்னர் அந்தப் பொருளுக்கு "பெனிசிலின்" என்று பெயர் வைத்தார்.

3. மின் காந்தத் தூண்டல் தத்துவத்தை கண்டறிந்தவர் யார்?
   மின் காந்தத் தூண்டல் தத்துவத்தை கண்டறிந்தவர் மைக்கேல் பாரடே.

4. ரேடியம் என்றால் என்ன? அதன் பயன்கள் யாது?
   "ரேடியம்" என்பது யுரேனியத்தைப் போல இருபது லட்சம் மடங்கு அதிக ஒளியைத் தரக் கூடிய தனிமம் ஆகும். இது மரம், கல் போன்ற அனைத்தையும் ஊடுருவிச் செல்லக் கூடியது. ரேடியம் எக்ஸ்–ரே எடுப்பதற்கும் பயன்படுகிறது. மேலும், புற்றுநோய் சிகிச்சையிலும், சில சரும நோய்களை குணப்படுத்தவும் இக்கதிர்கள் பயன்படுகின்றன.

5. சர்.சி.வி. இராமன் செய்த ஆராய்ச்சியைப் பற்றி எழுதுக.
   சர்.சி.வி. இராமன் கணக்கிலும், அறிவியலிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஒளிச்சிதறல் பற்றிய கட்டுரைகளை எழுதினார். 1930 ஆம் ஆண்டு ஒளியைப் பற்றிய 'இராமன் விளைவு' என்ற ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்றார். இவருக்கு இந்திய அரசு 'பாரத ரத்னா' விருதை வழங்கி கௌரவித்தது.

## 23. வாக்கியம்

**பக்கம் 93**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வாக்கியம்  2. செய்தி வாக்கியம்  3. விழைவு வாக்கியம்
4. வினா  5. தொடர் வாக்கியம்

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. வாக்கியம் என்றால் என்ன?
   பல சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு தெளிவானக் கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் எனப்படும்.

2. கருத்து வகை வாக்கியத்தை விளக்குக.
   கருத்தின் அடிப்படையில் அமைந்த வாக்கியம் கருத்து வகை வாக்கியம் எனப்படும். செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம், வினா வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் என கருத்து வகை வாக்கியங்கள் நான்கு வகைப்படும்.

3. செய்தி வாக்கியம் என்றால் என்ன?

கூற விரும்பும் செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்.

எ.கா. மலர்விழி பள்ளிக்குச் சென்றாள்.

4. விழைவு வாக்கியம் என்றால் என்ன? சான்று தருக.

கட்டளை, வேண்டுகோள் போன்றவற்றைத் தெளிவாக தெரிவிக்கும் வாக்கியம் கட்டளை வாக்கியம் எனப்படும். இதற்கு விழைவு வாக்கியம் என்ற பெயரும் உண்டு.

எ.கா.
- இளமையில் கல். (கட்டளை)
- தயவு செய்து நான் சொல்வதைக் கேள். (வேண்டுகோள்)

5. வினா வாக்கியத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

வினாப் பொருளைத் தெரிவிக்கும் வாக்கியம் வினா வாக்கியம் எனப்படும்.

எ.கா.
- திருக்குறளை எழுதியவர் யார்?
- இது யாருடைய புத்தகம்?
- மாடு எங்கே சென்றது?
- இலக்கணம் என்றால் என்ன?

6. உணர்ச்சி வாக்கியத்தை விவரி.

வியப்பு, துன்பம், அச்சம் போன்ற உணர்ச்சிகளைத் தெளிவாக உணர்த்தும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியம் எனப்படும்.

எ.கா.
- ஆஹா! என்னே தமிழின் அழகு! – வியப்பு
- ஆ! என் கால் வலிக்கிறதே! – துன்பம்
- ஐயோ! பாம்பு! பாம்பு! – அச்சம்

7. அமைப்பு வகை வாக்கியம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

அமைப்பின் அடிப்படையில் அமைந்த வாக்கியம் அமைப்பு வகை வாக்கியம் எனப்படும். தனி வாக்கியம், கலவை வாக்கியம், தொடர் வாக்கியம் என்பன அமைப்பு வகை வாக்கியத்தின் வகைகள் ஆகும்.

8. தனி வாக்கியம் என்றால் என்ன? சான்று தருக.

ஒரு பயனிலையானது, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்களைக் கொண்டு முடிவது தனி வாக்கியம் எனப்படும்.

எ.கா.
- கண்ணன் ஓடினான்.
- கயல்விழியும், இன்சுவையும் பாடினர்.

இதில் “ஓடினான்”, “பாடினர்” என்பன பயனிலை ஆகும்.

9. தொடர் வாக்கியத்தை விளக்குக.

ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலையானது, ஓர் எழுவாயைக் கொண்டு முடிவது தொடர் வாக்கியம் எனப்படும்.

எ.கா. இன்பரசன் நன்றாகப் படித்தான்; தேர்வு எழுதினான்; தேர்ச்சி பெற்றான்.

10. கலவை வாக்கியத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

- தமிழ் நீதி நூல்களைப் படித்தறிந்து, அதன்வழி நடக்க முயற்சி செய்தால் அனைவரும் வாழ்வில் சிறந்து விளங்கலாம்.
- எழிலரசி ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்று, வேகமாக ஓடி, முதல் பரிசு பெற்றாள்.

## 24. வேலைக்கேற்ற கூலி!

**பக்கம் 97**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சிறிய 2. அதிகமான 3. வந்தான்
4. தவறு 5. முறையான

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. மாணிக்கத்தின் கடையிலிருந்த உதவியாளர்கள் யார்? அவர்களின் பணி என்ன?

மாடசாமி, ஏகாம்பரம் ஆகிய இருவரும் மாணிக்கத்தின் கடையிலிருந்த உதவியாளர்கள் ஆவார்கள். மாடசாமி வாடிக்கையாளர்கள் கேட்கும் மளிகை சாமான்களை எடுத்துக் கொடுப்பவன். ஏகாம்பரம் கடையின் கணக்குப் பிள்ளை.

2. மாடசாமி ஏகாம்பரத்தின் மீது பொறாமைக் கொள்ளக் காரணம் என்ன?

மளிகைப் பொருட்களை எடுத்து வருவது, பொட்டலம் மடிப்பது, வீடுகளுக்குச் சென்று கொடுப்பது என அனைத்து வேலைகளையும் செய்து குறைவானக் கூலியைப் பெறுவதாகவும், ஏகாம்பரம் உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே அதிக ஊதியம் பெறுவதாகவும் எண்ணியதே மாடசாமி ஏகாம்பரத்தின் மீது பொறாமைக் கொள்ளக் காரணம் ஆகும்.

3. மாடசாமி பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டிற்கு எத்தனை முறை சென்று வந்தான்? ஏன்?

மாடசாமி பஞ்சாயத்துத் தலைவர் வீட்டிற்கு மூன்று முறை சென்று

வந்தார். பஞ்சாயத்துத் தலைவர் மகனின் திருமணத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்களுக்கான பட்டியலை வாங்கி வருவதற்காக சென்றான்.

4. ஏகாம்பரம் பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டிற்குச் சென்று வந்தபோது என்ன நிகழ்ந்தது என்பதை விவரி.
ஏகாம்பரம் பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டிற்குச் சென்று வந்தபோது, அவர் கொடுப்பதாக கூறிய மளிகைப் பொருட்களுக்கான பட்டியலுடன் வந்தார்.

5. ''வேலைக்கேற்ற கூலி'' என்ற கதையின் நீதி என்ன?
எந்த வேலை செய்தாலும், அந்த வேலையை எப்படி எளிதாக முடிக்க முடியும் என்பதை யோசித்து திறமையுடனும், புத்திசாலித்தனமாகவும் செயல்பட வேண்டும். அப்போதுதான் எந்த துறையாக இருந்தாலும் நாம் அதில் சிறந்து விளங்க முடியும்.

## 25. புதுமைப் பெண்

**பக்கங்கள் 100-101**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பகல் 2. அஞ்சிய 3. அறிவுடைமை
4. உண்மை 5. தூற்றிட 6. பழமை
7. காவாமை 8. இளைய

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. பெண்ணிற்கு அறமாவது என்று உதய கன்னி உரைப்பது என்ன?
பேரிருளாகிய அறியாமையில் அமிழ்த்தி, கல்வியின்றி ஞானமின்றி வாழும் இருண்ட வாழ்வை இகழ்ந்து ஒதுக்குதலே பெண்ணிற்கு அறமாகும் என்று உதய கன்னி உரைக்கின்றாள்.

2. வீரப் பெண்கள் ஒழிக்க விரும்புவது எதனை?
வீரப் பெண்கள் ஒழிக்க விரும்புவது வீடு என்னும் ஒரு வட்டத்திற்குள் வளர்வதையே ஆகும்.

3. புதுமைப் பெண்ணின் எண்ணங்கள் யாவை?
புதுமைப் பெண்கள் பல சாத்திரங்களைக் கற்பார்கள்; வசதிகள் பல செய்வார்கள்; மூடத்தனங்களை அழிப்பார்கள்; அறத்தின் வழி நின்று இறைவனே பெருமைக் கொள்ளும்படி வாழ்வார்கள். ஆண் மக்கள் அனைவரும் தம்மை போற்றி புகழ்ந்திடும்படி வாழ்வார்கள் என்பன புதுமைப் பெண்ணின் எண்ணங்கள் ஆகும்.

4. பாரதியார் – குறிப்பு வரைக.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் பிறந்தார். இவரின் பெற்றோர் சின்னசாமி ஐயர், இலட்சுமி அம்மாள். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் தனது 11 ஆம் வயதிலேயே கவிபாட தொடங்கினார். தமிழ் மொழியின் மீது அளவற்ற பற்றும், புலமையும் கொண்டவராக திகழ்ந்தார். இவர் கவிஞர், சமூக சீர்திருத்தவாதி, பத்திரிக்கை ஆசிரியர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவர். சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் என பல மொழிகளிலும் புலமைப் பெற்றவர். இத்தகைய புகழ்பெற்ற பாரதியார் அவர்கள் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

5. பாரதியாரின் படைப்புகள் சிலவற்றை எழுதுக.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி, தேசிய கீதங்கள், விடுதலைப் பாடல்கள், பகவத் கீதை, ஞான ரதம், சந்திரிகையின் கதை ஆகியன பாரதியாரின் படைப்புகள் ஆகும்.

## 26. வீரமங்கை வேலு நாச்சியார்

**பக்கம் 104**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 1730 2. வளரி 3. ஜெனரல் ஜோசப் ஸ்மித்
4. கோபால நாயக்கர் 5. ஹைதர் அலி

### ஆ) சிறுவினாக்களுக்கு விடையளி.

1. வேலு நாச்சியார் எங்கு, எப்போது பிறந்தார்?

வேலு நாச்சியார் இராமநாதபுரத்தில் 1730 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் நாள் பிறந்தார்.

2. வேலு நாச்சியார் புலமைப் பெற்று விளங்கிய மொழிகள் யாவை?

ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் உருது ஆகியன வேலு நாச்சியார் புலமைப் பெற்று விளங்கிய மொழிகள் ஆகும்.

3. முத்து வடுகநாத தேவர் எவ்வாறு இறந்தார்? ஏன்?

முத்து வடுகநாத தேவர் ஆங்கிலேய ஜெனரல் ஜோசப் ஸ்மித்தால் குறுக்கு வழியில் கொலை செய்யப்பட்டார். கிழக்கு இந்திய கம்பெனிக்கு வரி கட்டுமாறு முத்து வடுகநாத தேவரிடம் உத்தரவிட்டபோது, அவர் வரி கட்ட மறுத்து, ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டக் களத்தில் குதித்தார். எனவே, அவரை திட்டமிட்டு குறுக்கு வழியில் கொன்றனர்.

4. சிவகங்கையை மீட்கும் போரில் வேலு நாச்சியாருக்கு உதவி செய்தவர்கள் யார்?

சின்ன மருது, பெரிய மருது, குயிலி ஆகியோர் சிவகங்கையை மீட்கும் போரில் வேலு நாச்சியாருக்கு உதவி செய்தவர்கள் ஆவார்கள்.

5. வேலு நாச்சியாரின் தியாகத்தைப் போற்றும் வகையில் இந்திய அரசு செய்த மரியாதை என்ன?

இந்திய அரசு வேலு நாச்சியாரின் தியாகத்தையும், வீரத்தையும் மரியாதை செய்யும் வண்ணம் 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நினைவு தபால் தலையை வெளியிட்டது.

**இ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. வேலு நாச்சியாரின் இளமைப் பருவம் பற்றி எழுதுக.

வேலு நாச்சியார் சிறு வயதிலிருந்தே தற்காப்பு கலைகளை ஆர்வமாக பயின்றார். வாள் பயிற்சி, சிலம்பாட்டம், குதிரையேற்றம், வில்வித்தை என அனைத்து போர் கலைகளிலும் சிறந்து விளங்கினார். தமிழ் மொழி மட்டுமல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் உருது போன்ற மொழிகளிலும், கல்வியறிவிலும் சிறந்து விளங்கினார். மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி வேலு நாச்சியாரை ஓர் ஆண் மகனைப் போலவே வளர்த்தார். எனவே, மிகுந்த வீரமும், பல மொழிப் புலமையும், சிறந்த ஆளுமைத் திறனும் கொண்ட வீர மங்கையாகத் திகழ்ந்தார் வேலு நாச்சியார்.

2. வேலு நாச்சியார் யாருக்கு கடிதம் எழுதினார்? ஏன்?

திண்டுக்கல் சீமையிலுள்ள பாளையங்களில் ஒன்றான விருப்பாச்சியை ஆட்சி செய்த கோபால நாயக்கர் வேலு நாச்சியாருக்கு அடைக்கலம் கொடுத்தார். வேலு நாச்சியார் மைசூரை ஆண்டு வந்த ஹைதர் அலியிடம் உதவிக் கேட்டு கடிதம் எழுதினார். ஹைதர் அலியும் வேலு நாச்சியாருக்கு குதிரைகள், போர் வீரர்கள், பீரங்கிகள் என அனைத்தையும் கொடுத்து உதவினார்.

3. வேலு நாச்சியார் எவ்வாறு சிவகங்கையை மீட்டார்?

வேலு நாச்சியார் 1780 ஆம் ஆண்டு தமது படையுடன் மாவீரர்கள் மருது சகோதரர்கள் துணையுடன் சிவகங்கை நோக்கிப் புறப்பட்டார். கடும் போரில் காளையார் கோவிலைக் கைப்பற்றினார். இறுதியாக சின்ன மருது, பெரிய மருது மற்றும் குயிலியின் உதவியுடன் சிவகங்கையை மீட்டார். ஐம்பதாவது வயதில் தனது கணவரை கொன்ற ஜெனரல் ஜோசப் ஸ்மித்தையும், தளபதி பான்

ஜோரையும் தோற்கடித்து பழி தீர்த்தார். சிவகங்கை கோட்டையின் மீது அதுவரை பறந்து கொண்டிருந்த ஆங்கிலேயரின் கொடி இறக்கப்பட்டு, வேலு நாச்சியாரின் அனுமன் கொடி ஏற்றப்பட்டது.

## 27. முதலாம், இரண்டாம், மூன்றாம் வேற்றுமை

**பக்கம் 107**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வேற்றுமை உருபுகள் 2. வேறுபாடு 3. உருபு

4. ஐ 5. ஆல், ஆன்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. வேற்றுமை என்றால் என்ன?

பெயர்ச்சொற்களின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை ஆகும்.

2. வேற்றுமை உருபுகள் எதைச் சார்ந்தவை?

வேற்றுமை உருபுகள் என்பன பெயர்ச்சொற்களைச் சார்ந்து வரும் இடைச்சொற்கள் ஆகும்.

3. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை.

4. எழுவாய் வேற்றுமையை விளக்குக.

ஒரு வாக்கியத்தின் எழுவாயாக பெயர்ச்சொல் வந்தால் அது முதலாம் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை எனப்படும். எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை.

எ.கா. மலர்விழி பாடினாள்.

இத்தொடரில் “மலர்விழி” என்பது எழுவாய், “பாடினாள்” என்பது பயனிலை ஆகும்.

5. இரண்டாம் வேற்றுமை என்றால் என்ன?

ஒரு பெயர்ச்சொல்லின் பொருளானது செயப்படுபொருளாக வேறுபாடு அடைவதே இரண்டாம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள் வேற்றுமை எனப்படும்.

எ.கா. ரவி ஓவியத்தை வரைந்தான்.

இத்தொடரில், “ரவி” என்பது எழுவாய். “ஓவியம்” என்பது

பெயர்ச்சொல். இது "ஐ" என்னும் இரண்டாம் உருபை ஏற்று செயப்படுபொருளாக மாறி வந்துள்ளது.

6. அமுதன் மரத்தை வெட்டினான். – இத்தொடரில் பயின்று வந்துள்ள வேற்றுமையை விளக்குக.
"அமுதன் மரத்தை வெட்டினான்" என்னும் தொடரில் இரண்டாம் வேற்றுமை பயின்று வந்துள்ளது. இதில் "அமுதன்" என்பது எழுவாய், "மரம்" என்பது பெயர்ச்சொல் ஆகும். இத்தொடர் "ஐ" என்னும் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று செய்யப்படுபொருளாக மாறி வந்துள்ளது.

7. இரண்டாம் வேற்றுமை எந்தெந்த பொருளைச் சார்ந்து வரும்?
இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒப்பு, உடைமை போன்ற ஆறு வகையான பொருள்களில் வரும்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளை எழுதுக.
ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகியன மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆகும்.

9. கருவி மற்றும் கருத்தாவை சான்றுடன் விளக்குக.
கருவி என்பது ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்கு பயன்படுத்தும் சாதனத்தைக் குறிக்கும். கருத்தா என்பது தொழிலைச் செய்பவரைக் குறிக்கும்.

- **கருவி:** எழுதுகோலால் கடிதம் எழுதினான்.
  இதில் "எழுதுகோல்" என்பது கடிதம் எழுதும் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட சாதனமாகிய கருவியைக் குறிக்கிறது.
- **கருத்தா:** இது தச்சரால் செய்யப்பட்ட கட்டில்.
  இதில் "தச்சர்" என்பது கட்டில் செய்தல் என்னும் தொழிலைச் செய்தவரைக் குறிக்கிறது.

10. உடனிகழ்ச்சி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
உடனிகழ்ச்சி என்பது வினை கொண்டு முடிகின்ற ஓர் எழுவாயின் செயலுடன் மற்றொரு செயலும் உடன் நிகழ்வதாகும்.
எ.கா. ராமனோடு கந்தனும் பள்ளிக்குச் சென்றான்.
இத்தொடரில் "ராமன்" பள்ளிக்குச் சென்றான் என்பதோடு, அவனுடன் வந்த கந்தனும் பள்ளிக்குச் சென்றான் என்ற மற்றொரு செயலையும் குறிக்கின்றது.

## 28. பொறாமைக்கு இடம் கொடேல்!

**பக்கங்கள் 111-112**

**அ) பிரித்து எழுதுக.**

1. மதி + நுட்பம்
2. கேட்டு + அறிந்து
3. நாட்டில் + உள்ள
4. பல + முறை
5. பாழ் + அடைந்த

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. உத்தரவிட்டார்
2. சுரங்கப்பாதை
3. தலைமுடி
4. பலமடங்கு
5. அரசவை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. பீர்பால் மீது மக்கள் பெருமதிப்பு வைத்திருக்க காரணம் யாது?
   பீர்பால் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை தீர்த்து வைப்பதால் மக்கள் அனைவரும் பீர்பால் மீது பெருமதிப்பு கொண்டிருந்தனர்.

2. பீர்பால் மீது பொறாமை கொண்டவன் யார்? ஏன்?
   பீர்பால் மீது பொறாமை கொண்டவன் அக்பரின் முடித்திருத்துபவன். அக்பர் அடிக்கடி பீர்பாலின் அறிவுத் திறனைப் பாராட்டி விலையுயர்ந்த பரிசுகளை அளிப்பதே அவன் பொறாமை கொண்டதற்கான காரணம் ஆகும்.

3. அக்பரின் தந்தையைப் பற்றி தெரிந்து கொள்ள முடிதிருத்துபவன் கூறிய யோசனை என்ன?
   நாட்டிலுள்ள மிகுந்த அறிவாளியான ஒருவரை சொர்க்கத்திற்கு அனுப்பினால் அக்பரின் தந்தையைப் பற்றி தெரிந்து கொள்ளலாம் என்பதே முடிதிருத்துபவன் கூறிய யோசனை ஆகும்.

4. பீர்பால் கிணற்றுக்குள் போகும் முன் செய்த காரியம் என்ன?
   பீர்பால் கிணற்றினுள் செல்லும் முன் கிணற்றின் வழியாக தன் வீட்டிற்கு செல்வதற்கான ரகசிய சுரங்கப்பாதை ஒன்றை அமைத்தார்.

5. “பொறாமைக்கு இடம் கொடேல்” என்ற கதை மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட நீதி என்ன?
   பொறாமை கொண்டவர்க்கு அழிவைத் தவிர வேறு எதிரிகள் இல்லை. அவர்களின் பொறாமையே அவர்களை அழித்துவிடும். பொறாமை கொண்டு இந்த உலகில் உயர்ந்தோர் எவரும் இல்லை. எனவே, பொறாமை எனும் தீய குணத்தை ஒழிக்க வேண்டும்.

## 29. திருக்குறள்

**பக்கம் 116**

**அ) பிரித்து எழுதுக.**

1. பெரும் + பொருள் 2. உள் + பகை 3. பிணி + இன்மை
4. நாடு + என்ப 5. கேடு + அறியா

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பிரிவது 2. உயர்வு 3. துன்பம் 4. நட்பு 5. நன்மை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. நல்ல நாட்டில் சேர்ந்து வாழ்வோர் யார்?
குறையாத உற்பத்தியை தரும் உழைப்பாளர்களும், தக்க அறிஞரும், சுயநலம் இல்லாத செல்வம் உடையவரும் நல்ல நாட்டில் சேர்ந்து வாழ்வோர் ஆவர்.

2. சிறந்த நாடு எவற்றைத் தரவல்லது?
மிக்க பொருள் வளத்தையும், எல்லோரும் விரும்பும் படியும், கேடுகள் இல்லாமல், மிகுதியான விளைபொருள் தருவதே சிறந்த நாடாகும்.

3. "உறுபசியும் ஓவாப் பிணியும்" – எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
மிகுந்த பசியும், நீங்காத நோயும், வெளியில் இருந்து வரும் பகையும் தன்னிடம் சேராமல் இருப்பதே நாடாகும்.

4. நாடுகளில் சிறந்தது என அறிந்தோர் கூறுவது எதனை?
பகைவரால் கெடுதல் வராமலும், அவ்வாறு கெடுதல் வந்த காலத்திலும் வளம் குறையாததாய் உள்ள நாடே, நாடுகளில் சிறந்தது என்று அறிந்தோர் கூறுவர்.

5. நாட்டிற்கு அழகு சேர்ப்பன எவை?
நோய் இல்லாமை, செல்வம், நல்ல விளைச்சல், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு சேர்ப்பனவாகும்.

## 30. தலைமை வகிப்போம்

**பக்கம் 118**

**அ) பிரித்து எழுதுக.**

1. விதி + முறை 2. நிலை + உயர் 3. அறம் + நெறி
4. அவர் + அவர் 5. நல்ல + உலகம்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஒழிக்க வேண்டியவை எவை?
   சுரண்டலும் பதுக்கலும் ஒழிக்க வேண்டியவை ஆகும்.

2. எவற்றை மதிக்க வேண்டும்?
   மனிதனின் உழைப்பை மதிக்க வேண்டும்.

3. வயல்களில் கொடுக்க வேண்டியது எதனை?
   வயல்களில் கொடுக்க வேண்டியது உழைப்பு ஒன்றே ஆகும்.

4. சிறந்து விளங்கத் தேவையானது எது?
   மற்றவருக்கு உதவி செய்யும் மனமே சிறந்து விளங்கத் தேவையானதாகும்.

5. முடியரசன் அவர்களின் படைப்புகளைப் பட்டியலிடுக.
   பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள், பாடுங்குயில், தமிழ் முழக்கம், தாய்மொழி காப்போம் முதலியன முடியரசன் அவர்களின் படைப்புகள் ஆகும்.

## 31. நெல்சன் மண்டேலா

**பக்கம் 121**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தென்னாப்பிரிக்காவின் தந்தை 2. 1918 3. சோசா
4. நெல்சன் ரோலிலாலா மண்டேலா 5. 1994

**ஆ) பொருத்துக.**

1. ஜூலை 18 2. ரோலிலாலா 3. 1990
4. டிசம்பர் 5 5. 1993

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. நெல்சன் மண்டேலா எங்கு, எப்போது பிறந்தார்?
   நெல்சன் மண்டேலா அவர்கள் தென்னாப்பிரிக்காவிலுள்ள குலு என்னும் சிறிய கிராமத்தில் 1918 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் பிறந்தார்.

2. மண்டேலாவிற்கு “நெல்சன்” என்ற பெயரைச் சூட்டியவர் யார்?
   மண்டேலாவிற்கு “நெல்சன்” என்ற பெயர், இவர் முதன்முதலாக கல்வி கற்ற பள்ளியின் ஆசிரியரால் சூட்டப்பட்டது.

3. மண்டேலாவிற்கு எப்போது, எத்தனை ஆண்டுகள் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது?
   1964 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் நாள் அன்று

மண்டேலாவுக்கு 27 ஆண்டுகளுக்கான ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

4. மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கருப்பின அதிபராக எப்போது தேர்வு செய்யப்பட்டார்?
   மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கருப்பின அதிபராக 1994 ஆம் ஆண்டு மே 10 ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

5. நெல்சன் மண்டேலாவிற்கு வழங்கப்பட்ட உயரிய விருதுகளின் பெயர்களை எழுதுக.
   பாரத ரத்னா, அமைதிக்கான நோபல் பரிசு, அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான மகாத்மா காந்தி சர்வதேச விருது போன்றவை நெல்சன் மண்டேலாவிற்கு வழங்கப்பட்ட உயரிய விருதுகள் ஆகும்.

## 32. இலக்கிய வகைச் சொற்கள்

**பக்கங்கள் 125-126**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சொல் 2. நான்கு 3. இயற்சொற்கள்
4. பெயர்த் திரிசொல் 5. இரண்டு

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. சொல் என்றால் என்ன?
   ஓர் எழுத்து தனித்து வந்தோ அல்லது பல எழுத்துகள் தொடர்ந்து வந்தோ பொருள் தருவது சொல் எனப்படும்.

2. இலக்கிய வகைச் சொற்களின் வகைகளை விளக்குக.
   இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன இலக்கிய வகைச் சொற்களின் வகைகளாகும்.

3. இயற்சொல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
   அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இயற்சொல் இரண்டு வகைப்படும். அவை பெயர் இயற்சொல், வினை இயற்சொல்.

4. பெயர் இயற்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   எளிதில் பொருள் விளங்கும் வகையில் வரும் பெயர்ச்சொல் பெயர் இயற்சொல் எனப்படும்.
   
   எ.கா. மாடு
   
   “மாடு” என்ற பெயர்ச்சொல்லின் பொருளானது அனைவருக்கும் எளிதில் விளங்கும் வகையில் உள்ளது.

5. வினை இயற்சொல்லை சான்றுடன் விளக்குக.
எளிதில் பொருள் விளங்கும் வகையில் வரும் வினைச்சொல் வினை இயற்சொல் எனப்படும்.
எ.கா. ஓடினான்
“ஓடினான்” என்ற வினைச்சொல்லின் பொருளானது எளிதில் விளங்கும் படி உள்ளது.

6. திரிசொல் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
கற்றவர்கள் மட்டுமே பொருள் உணர்ந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ள சொற்கள் திரிசொற்கள் எனப்படும். திரிசொல் இரண்டு வகைப்படும். அவை பெயர்த் திரிசொல், வினைத் திரிசொல்.

7. பெயர்த் திரிசொல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
கற்றவர்கள் மட்டுமே எளிதில் பொருள் உணருமாறு அமைந்த பெயர்ச்சொல் பெயர்த் திரிசொல் எனப்படும். ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல், பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல் என பெயர்த் திரிசொல் இரண்டு வகைப்படும்.

8. வினைத் திரிசொல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
படித்தவர்கள் மட்டுமே எளிதில் பொருள் உணருமாறு அமைந்த வினைச்சொல் வினைத் திரிசொல் எனப்படும். ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல், பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல் என வினைத் திரிசொல் இரண்டு வகைப்படும்.

9. திசைச் சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
வடமொழி அல்லாத பிறமொழிச் சொற்கள் அம்மொழிகளில் எந்தெந்தப் பொருள்களில் வழங்கப்படுகின்றனவோ அவ்வாறே தமிழிலும் வந்து பொருள் தரும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.
எ.கா. கசாயம், பட்டாணி – மராத்தி
பண்டிகை, கெட்டி – தெலுங்கு
அசல், இனாம் – உருது

10. வடசொல் எத்தனை வகைப்படும்? சான்றுடன் விளக்குக.
தற்சமம், தற்பவம் என வடசொற்கள் இரண்டு வகைப்படும்.
**தற்சமம்:** வடசொற்கள் தமிழ் மொழியில் தமிழ்ச் சொற்கள் போன்றே வருவது தற்சமம் எனப்படும்.
எ.கா. சுதந்திரம், கமலம்
**தற்பவம்:** வடமொழிக்குரிய சிறப்பு எழுத்துகள் தமிழ்த் தன்மைக்கேற்ப மாறி வருவது தற்பவம் எனப்படும்.
எ.கா. விஷம் – விடம், ஹரி – அரி, வருஷம் – வருடம்

## 33. அரசனின் பரிசு

**பக்கம் 129**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. வீரவர்மன் யார்? அவன் எப்படிப்பட்டவன்?
   வீரவர்மன் ரத்தினபுரி என்னும் நாட்டின் மன்னன். அவன் ஏழைகளிடத்தில் கருணையுள்ளம் கொண்டவன்.

2. வீரவர்மன் எங்கு படுத்து உறங்கினான்?
   வீரவர்மன் ஒரு மாமரத்தடியில் படுத்து உறங்கினான்.

3. வீரவர்மனுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது?
   விறகுவெட்டி தன் பசியாற்ற மாமரத்தின் மேலுள்ள பழங்களை பறிக்க கல்லை எறிந்தான். அந்தக் கல் வீரவர்மனின் நெற்றியின் மீது பட்டதால் காயம் ஏற்பட்டது.

4. விறகுவெட்டியை கைது செய்ய உத்தரவிட்டது யார்? ஏன்?
   விறகுவெட்டியை கைது செய்ய உத்தரவிட்டது அரசனின் தம்பி மாறவர்மன். தன் அண்ணனின் காயத்திற்கு விறகுவெட்டி தான் காரணம் என்று கருதியதால் கைது செய்ய சொன்னான்.

5. விறகுவெட்டியை விசாரித்த அரசன் தன் அதிகாரிகளுக்கிட்ட உத்தரவு யாது?
   விறகுவெட்டியை விசாரித்த அரசன், அவனை விடுதலை செய்யுமாறும், அவனுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும், பொற்காசுகளையும் கொடுத்து அவன் பசியின்றி வாழ வழி செய்யுமாறும் தன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டான்.

## 34. திருக்குறள்

**பக்கம் 133**

**அ) பிரித்து எழுதுக.**

1. ஊங்கு + இல்லை
2. அறம் + வினை
3. மாசு + இலன்
4. அனைத்து + அறன்
5. இன்னா + சொல்

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. நினைத்தல்
2. இனிய
3. வேண்டும்
4. துன்பம்
5. இகழ்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. எதைச் செய்தல் நன்மை தருமென வள்ளுவர் கூறுகிறார்?
   அறம் செய்தலே நன்மை தருமென வள்ளுவர் கூறுகிறார்.

2. ‘மனத்துக்கண் மாசிலன்’ – குறளை விளக்குக.

ஒருவன் தன் மனதில் குற்றம் இல்லாதவனாக இருத்தல் வேண்டும். அறம் என்பது அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை அனைத்தும் ஆடம்பரங்களே ஆகும்.

3. இடம் கொடுக்கக் கூடாத நான்கு குற்றங்கள் யாவை?

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகியன இடம் கொடுக்கக் கூடாத நான்கு குற்றங்கள் ஆகும்.

4. இறுதிக்காலத்தில் துணையாக வருவது எது?

இளைஞராக இருப்பவர், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் கொள்ளாமல் தொடர்ந்து அறம் செய்ய வேண்டும். அதுவே இறுதிக்காலத்தில் அழியாத் துணையாக வரும்.

5. ‘அறத்தான் வருவதே இன்பம்’ – குறளின் பொருளை எழுதுக.

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பமும், புகழும் அற்றவையாகும்.

## 35. ஏலாதி

**பக்கம் 135**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. உண்மை  2. நில்லாது  3. சிறியார்  4. நன்று

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரசன் எல்லா நன்மைகளையும் அடையும் வழி யாது?

தான் பொய் கூறாமலும், பிறர் கூறும் பொய்களுக்கு உடன்படாமலும், புலால் உண்ணாமலும், யாரையும் திட்டாமலும், பிறரை வருத்தாமலும், வழி திருத்தி, நல்ல தூய்மையான உணவினை அனைவருக்கும் பிரித்துக் கொடுப்பவன் கடல் சூழ்ந்த உலகிற்கு அரசனாகி அனைத்து நன்மைகளையும் அடைவான்.

2. நாடாளும் அரசனின் பண்புகளை எழுதுக?

ஒழுக்கத்தைப் பற்றிய சான்றோர்களின் அறிவுரைகளைப் போற்றியும், அவ்வொழுக்க நெறிகளிலிருந்து மாறாமலும், அன்பு நிறைந்த அடியவரை விட்டு நீங்காமலும், வஞ்சகர்களின் சொற்களை நம்பாமலும், அவர்களோடு நட்பு கொள்ளாமலும், வாழ்க்கையின் பயனை ஆராய்ந்துணர்ந்து, விருந்தினருக்கு படைத்துத் தானும் உண்பதே நாடாளும் அரசனின் பண்புகள் ஆகும்.

3. அழிவில்லா அரசுரிமையைப் பெறுபவன் யார்?

பழிதரும் செயலை விரும்பாமலும், விருந்தினர்களை உபசரித்தும், தன் இல்லத்தில் பிறர் வந்து உண்ணும்படி தான் உண்ணும் செய்தியை அறிவித்துப் பின்னர் உண்பவனே அழிவில்லாத அரசுரிமையைப் பெறுபவன் ஆவான்.

4. ஏலாதி – பெயர்க்காரணத்தை எழுதுக.

ஏலாதி என்னும் நூலை இயற்றியவர் கணிமேதாவியார். ஏலாதி என்பது மருத்துவப் பெயராகும். ஏலம், இலவங்கம், நாககேசரம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு மருந்துகளின் கலவையே "ஏலாதி" ஆகும். இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உள்பட 81 வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் ஆறு நல்ல கருத்துகளை எடுத்துரைப்பதால் ஏலாதி என்றழைக்கப்படுகிறது.

## 36. சுவாமி விவேகானந்தர்

**பக்கம் 139**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| 1. 1863 | 2. ஸ்காட்டிஷ் சர்ச் | 3. 1886 |
| 4. கன்னியாகுமரி | 5. சிகாகோ | |

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. விவேகானந்தர் எங்கு, எப்போது பிறந்தார்?

சுவாமி விவேகானந்தர் அவர்கள் கல்கத்தாவில் 1863 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள் பிறந்தார்.

2. விவேகானந்தரின் பெற்றோர் பெயர் யாது?

விவேகானந்தரின் பெற்றோர் விஸ்வநாத் தத்தா மற்றும் புவனேஸ்வரி தேவி ஆவர்.

3. சுவாமி விவேகானந்தரின் சிகாகோ உரை பற்றி எழுதுக.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் 1893 ஆம் ஆண்டு நடைபெற்ற சிகாகோ மாநாட்டிற்கு பின்னர் உலகம் முழுவதும் பிரபலமடைந்தார். தனது உரையைத் தொடங்கும் முன்னர் அவர் பயன்படுத்திய "எனது அருமை அமெரிக்க சகோதர, சகோதரிகளே!" என்ற வார்த்தைகளே அதற்கு காரணமாகும். தனது பிரமிப்பூட்டும் பேச்சுத்திறனால் அங்கு கூடியிருந்த அனைவரையும் மெய்மறக்கச் செய்தார்.

4. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மடம் – குறிப்பு வரைக.

சுவாமி விவேகானந்தர் இந்திய மக்களின் மத்தியில் ஆன்மீக

வளர்ச்சிக்காக பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். 1897 ஆம் ஆண்டு “ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்” என்ற அமைப்பினைத் தொடங்கினார். அதன் சிந்தனைகளையும், இலக்குகளையும் முறைப்படுத்தினார். இரண்டு ஆண்டிற்கு பிறகு கங்கை நதிக்கரையில் ஸ்ரீராமகிருஷ்ணர் மடத்தை நிறுவினார். இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கும், ஆதரவற்றோர்களுக்கும் உதவிக் கரம் நீட்டி, அவர்களின் துன்பத்தை துடைத்தார்.

5. “தேசிய இளைஞர் தினம்” எப்போது கொண்டாடப்படுகிறது? ஏன்?
இந்தியாவில் வருடந்தோறும் ஜனவரி 12 ஆம் நாள் “தேசிய இளைஞர் தினம்” கொண்டாடப்படுகிறது. இளைஞர்களின் மீது மிகுந்த நம்பிக்கையும், பற்றும் கொண்டிருந்த விவேகானந்தரை பெருமைப்படுத்தும் விதமாக அவரது பிறந்தநாள் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்படுகிறது.

## 37. அணி இலக்கணம்

**பக்கம் 142**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அழகு 2. தண்டியலங்காரம் 3. தற்குறிப்பேற்ற அணி
4. வஞ்சப்புகழ்ச்சி அணி 5. பிறிது மொழிதல் அணி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அணி இலக்கணம் என்றால் என்ன?
அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். செய்யுளில் அமைந்து கிடக்கும் சொல்லழகு, பொருளழகு ஆகியவற்றை வரையறுத்துக் கூறுவதே அணி இலக்கணம் ஆகும்.

2. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.
இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தனது குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

எ.கா. போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகரத்திற்குள் நுழையும்போது, நுழைவுவாயிலின் மீதிருந்த நீண்ட கம்பத்தில் பறந்து கொண்டிருந்த தோரண கொடியானது, கோவலன் மதுரையில் கொல்லப்படுவான் என்பதை முன்னரே அறிந்து அவர்களை மதுரைக்குள் வர வேண்டாம் எனவும், திரும்பிச் சென்று விடுங்கள் எனவும் கூறுவதாக கவிஞர் கூறுகிறார். காற்றில் கொடி அசைதல் என்னும் இயல்பான நிகழ்வின் மீது தனது கற்பனை குறிப்பை ஏற்றிக் இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

3. வஞ்சப்புகழ்ச்சி அணி என்றால் என்ன?

பிறரை புகழ்வது போல் மறைமுகமாக இகழ்வதும், இகழ்வது போல் மறைமுகமாகப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

4. புகழ்வது போல் இகழ்தலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

எ.கா. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

கயவர்கள் தங்களின் மனம் விரும்பும் செயலை தடுப்பாரின்றிச் செய்து முடிப்பர். எனவே அவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்பதே இதன் பொருள். கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் எனக் கூறினாலும், தேவர்கள் உயர்ந்த நற்செயல்களையே செய்வர்; கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறார். இதுவே புகழ்வது போல இகழ்தல் ஆகும்.

5. இகழ்வது போல் புகழ்தல் என்றால் என்ன?

எ.கா. பாரி பாரி என்றுபல ஏத்தி,
ஒருவர்ப் புகழ்வர், செந்நாப் புலவர்:
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே.

புலவர்கள் பலர் பாரி ஒருவனையே புகழ்ந்து பாடுகின்றனர். பாரி மட்டுமா கைமாறு கருதாமல் உதவுகிறான்? மாரியும்தான் கைம்மாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகை வளர்க்கின்றது. இப்பாடல் பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவர் இவ்வுலகில் யாரும் இல்லை என அவரின் ஒப்பற்ற கொடைத்தன்மையை புகழ்ந்துரைப்பதாகும். இதுவே இகழ்வது போல் புகழ்தல் ஆகும்.

6. பிறிது மொழிதல் அணியை விளக்குக.

கவிஞர் தாம் கூற விரும்பிய கருத்தை நேரடியாகவும், வெளிப்படையாகவும் கூறாமல், அதனோடு தொடர்புடைய மற்றொன்றின் மீது ஏற்றிக் கூறுவதன் வாயிலாக, தாம் கூறவந்த கருத்தை வெளிப்படுத்துவதே பிறிது மொழிதல் அணி ஆகும்.

எ.கா. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

மயிலிறகு மிகவும் மென்மையானது என்றாலும் அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றினால் அதன் பாரம் தாங்காமல் வண்டியின் அச்சாணி முறிந்து விடும். அதுபோலவே வலிமையற்ற எதிரிகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்து, மிகுந்த வலிமை கொண்ட ஓர் அரசனின் நாட்டின் மீது போர் தொடுத்தால், அந்த அரசனும்

நிலைகுலைந்து போவான் என்னும் கருத்தை திருவள்ளுவர் வெளிப்படையாகக் கூறாமல், வேறொரு கருத்தின் மூலமாக அதை வெளிப்படுத்தியதால் இது பிறிது மொழிதல் அணியாயிற்று.

## 38. பழமொழிக் கதைகள்

**பக்கம் 148**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பழைய 2. வரவு 3. துன்பம் 4. தோல்வி 5. தொலைவில்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. அறிவழகனின் அம்மா அவனிடம் என்ன கொடுத்தார்?

அறிவழகனின் அம்மா அவனிடம் ஓர் உண்டியலைக் கொடுத்தார்.

2. அறிவழகனுக்கு சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்த அவனின் அப்பா செய்த காரியம் என்ன?

அறிவழகனுக்கு சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக அறிவழகனின் அப்பா அவர்களின் வீட்டுக் குழாயில் சொட்டுச் சொட்டாக தண்ணீர் ஒழுகிக் கொண்டுள்ளது எனவும், அந்தக் குழாயின் அடியில் ஒரு பாத்திரத்தை வைத்துவிட்டு வருமாறும் கூறினார். மறுநாள் காலை அந்தப் பாத்திரத்தை எடுத்து வருமாறு அறிவழகனிடம் கூறினார். சிறிது நேரம் கழித்து வெறுங்கையுடன் வந்த அறிவழகன் பாத்திரம் நிறைந்து இருப்பதால் தன்னால் அதை தூக்கிக் கொண்டு வர இயலவில்லை என கூறினான். அதற்கு அவனின் அப்பா சொட்டுச் சொட்டாக விழும் தண்ணீரைப் போல நாம் இன்று சிறுகச் சிறுகச் சேமிக்கும் ஒவ்வொன்றும் நாளை பெரியதாக மாறும் என கூறி சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்.

3. ‘‘சிறுதுளி பெரு வெள்ளம்’’ என்ற கதையின் நீதி யாது?

சேமிப்பு என்பதன் அவசியம் பற்றிய எந்தவொரு விழிப்புணர்வும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடாது. சிறுசிறு சேமிப்புகளே எதிர்காலத்தில் பெரியப் பெரிய தேவைகளைப் பூர்த்தி செய்து, நலமாக வாழ உதவி செய்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வீண் செலவு செய்வதைக் குறைத்து, எதிர்காலத்திற்காக இன்றிலிருந்தே சேமிக்கத் தொடங்க வேண்டும்.

4. அரசன், அருளப்பரிடம் என்ன கொடுத்தார்? ஏன்?

அரசன், அருளப்பரிடம் தனது வைர மோதிரத்தைக் கொடுத்தார். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதே அருளப்பரின் வேத

வாக்காகும். அவர் ஏழையாக இருந்தாலும் மிகுந்த நேர்மையுடன் இருந்ததால் மக்கள் அனைவரும் அவரை மதித்து வணங்கினார்கள். அருளப்பரின் மீது மிகுந்த பொறமைக் கொண்ட அரசன், அவரின் கருத்தைப் பொய் என நிரூபிக்க வேண்டுமென நினைத்து தனது மோதிரத்தை அவரிடம் கொடுத்தார்.

5. அருளப்பருக்கு மோதிரம் எவ்வாறு திரும்பக் கிடைத்தது?
அருளப்பர் அரசனின் மோதிரத்தை ஒப்படைக்க வேண்டிய நாள் வந்தது. கடவுள் எப்படியும் தன்னை காப்பாற்றுவார் என மிகுந்த நம்பிக்கையுடன் காலையிலேயே ஆற்றிற்கு மீன் பிடிக்க சென்றார். அன்று அவரின் வலையில் சிக்கியது ஒரே ஒரு மீன்தான். அந்த மீனை சமைத்து சாப்பிட்டுவிட்டு அரண்மனைக்கு செல்லலாம் என முடிவு செய்தார். அருளப்பரின் மனைவி அந்த மீனை சுத்தம் செய்ய வெட்டியபோது அதன் வயிற்றிலிருந்து அரசனின் வைர மோதிரம் வெளியே வந்து விழுந்தது.

## 39. ஓடி விளையாடு பாப்பா

**பக்கம் 151**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சிறுகுருவி 2. கோழி 3. நாய்
4. குதிரை 5. சோர்ந்து

**ஆ) பிரித்து எழுதுக.**

1. விளை + ஆடு 2. தோழன் + அடி 3. தெய்வம் + உண்டு
4. தாய் + என்று 5. உயிர்கள் + இடத்தில்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. யாரை வையக் கூடாது?
குழந்தையை வையக் கூடாது.

2. எதைக் கண்டு மன மகிழ்ச்சிக் கொள்ள வேண்டும்?
வண்ண வண்ணப் பறவைகளைக் கண்டு மன மகிழ்ச்சிக் கொள்ள வேண்டும்.

3. எவற்றை ஆதரிக்க வேண்டுமென பாரதியார் கூறுகிறார்?
குதிரை, மாடு, ஆடு போன்றவற்றை ஆதரிக்க வேண்டுமென பாரதியார் கூறுகிறார்.

4. எது கெடுதலைத் தரும்? யார் சொல்லை தட்டக் கூடாது?
சோம்பல் கெடுதலைத் தரும். தாய் சொல்லை தட்டக் கூடாது.

5. தமிழ்நாட்டைப் பற்றி பாரதியார் கூறுவதை எழுதுக.

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்களை பெற்றெடுத்த அன்னையை வணங்கி போற்றுவது போல தமிழ்த் திருநாட்டையும் வணங்கி போற்றிட வேண்டும். அமிழ்தத்தை விட இனிமையானது நமது தமிழ் மொழி. உலகம் போற்றி வணங்கும் பல அறிஞர் பெருமக்கள் வாழ்ந்த நாடு நமது தமிழ்த் திருநாடு என பாரதியார் கூறுகிறார்.

## 40. ஹாக்கியின் பிதாமகன் தியான் சந்த்

**பக்கங்கள் 155-156**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 1905 2. போல்திவாரி 3. 14
4. ஆகஸ்ட் 29 5. பத்மபூஷன்

**ஆ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. தியான் சந்த் எங்கு, எப்போது பிறந்தார்? அவரின் பெற்றோர்களின் பெயர் என்ன?

தியான் சந்த் உத்திரபிரதேச மாநிலத்திலுள்ள அலகாபாத் என்னும் நகரில் 1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் சமேஷ்வர் சிங் மற்றும் சரதா சிங் ஆவர்.

2. தியான் சந்த்தின் சர்வதேச ஹாக்கி பயணத்தின் தொடக்கம் பற்றி எழுதுக.

1926 ஆம் ஆண்டிற்குப் பிறகு, நியூசிலாந்து நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய இராணுவ அணியில் தியான் சந்த் இடம்பிடித்தார். அதுவே, அவருடைய சர்வதேச ஹாக்கி பயணத்தின் தொடக்கமாக அமைந்தது.

3. 1928 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரில் தியான் சந்த் நிகழ்த்திய சாதனை என்ன?

நெதர்லாந்து நாட்டில் 1928 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் பங்கேற்ற இந்திய ஹாக்கி அணிக்காக தேர்வு செய்யப்பட்டார் தியான் சந்த். அந்த ஒலிம்பிக் தொடரின் குழுச் சுற்றில் இரண்டு முறை தலா 3 கோல்களையும், அரையிறுதியில் 4 கோல்களையும் அடித்து, இந்திய அணி இறுதி போட்டிக்கு முன்னேற உதவி செய்தார். இறுதிப் போட்டியில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை என்றாலும், இந்திய அணி நெதர்லாந்து அணியை 3–0 என்ற கோல் கணக்கில் வென்று தங்கப் பதக்கத்தை வென்றது.

அந்த ஒலிம்பிக் தொடரில் 5 போட்டிகளில் விளையாடிய தியான் சந்த் 14 கோல்களை அடித்து அசத்தினார்.

4. “ஹாக்கி இரட்டையர்கள்” என அழைக்கப்பட்டவர்கள் யார்? ஏன்?
“ஹாக்கி இரட்டையர்கள்” என அழைக்கப்பட்டவர்கள் தியான் சந்த் மற்றும் அவரது சகோதரர் ரூப் சிங். 1932 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் இருவரும் இணைந்து 25 கோல்களை அடித்து அசத்தியதால் “ஹாக்கி இரட்டையர்கள்” என அனைவரும் இவர்களை பாராட்டினார்கள்.

5. தியான் சந்த் விருது யாருக்கு வழங்கப்படுகிறது?
இந்தியாவில் விளையாட்டுத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தவர்களுக்கு “தியான் சந்த் விருது” என்னும் தேசிய விருது இந்திய அரசால் வழங்கப்படுகிறது.

**இ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. 1928, 1932 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரைப் பற்றி எழுதுக.
நெதர்லாந்து நாட்டில் 1928 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் பங்கேற்ற இந்திய ஹாக்கி அணிக்காக தேர்வு செய்யப்பட்டார் தியான் சந்த். அந்த ஒலிம்பிக் தொடரின் குழுச் சுற்றில் இரண்டு முறை தலா 3 கோல்களையும், அரையிறுதியில் 4 கோல்களையும் அடித்து, இந்திய அணி இறுதி போட்டிக்கு முன்னேற உதவி செய்தார். இறுதிப் போட்டியில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை என்றாலும், இந்திய அணி நெதர்லாந்து அணியை 3–0 என்ற கோல் கணக்கில் வென்று தங்கப் பதக்கத்தை வென்றது. இந்த ஒலிம்பிக் தொடரில் 5 போட்டிகளில் விளையாடிய தியான் சந்த் 14 கோல்களை அடித்து அசத்தினார்.

1932 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின் இறுதிப்போட்டியில் இந்திய அணி 24–1 என்ற கோல் கணக்கில் அமெரிக்க அணியைத் தோற்கடித்து, இரண்டாவது முறையாக தங்கப் பதக்கத்தை வென்றது. இத்தொடரில் தியான் சந்த் மற்றும் அவரது சகோதரர் ரூப் சிங் ஆகிய இருவரும் இணைந்து 25 கோல்களை அடித்து அசத்தினார்கள்.

2. 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரில் தியான் சந்த் நிகழ்த்திய சாதனை என்ன?
1936 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் தொடர் ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் நடைபெற்றது. அதில் பங்கேற்ற இந்திய ஹாக்கி அணியின் அணித்தலைவராக தியான் சந்த் நியமிக்கப்பட்டார்.

அந்த ஆண்டிற்கான ஒலிம்பிக் தொடரின் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த இந்திய அணி ஜெர்மனி அணியை எதிர்கொண்டது. ஆட்டத்தின் முதல் பாதியில் இந்திய அணி வெறும் ஒரே ஒரு கோலை மட்டுமே அடித்திருந்தது. இரண்டாவது பாதி தொடங்கிய போது தனது காலணிகளை கழட்டி வைத்துவிட்டு வெறும் கால்களுடன் களத்தில் இறங்கினார் தியான் சந்த். அனைவரும் அவரை வியப்புடன் பார்த்தனர். தியான் சந்த் விறுவிறுவென அடுத்தடுத்து மூன்று கோல்களை அடித்து ஜெர்மனியின் பதக்க கனவை தகர்த்தெறிந்தார். அந்த ஆட்டத்தில் இந்திய அணி ஜெர்மனியை **8–1** என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. தியான் சந்தின் அசாத்தியமான திறமையால் தொடர்ந்து மூன்றாவது முறையாக தங்கப் பதக்கத்தை வென்றது இந்திய அணி.

**3.** ஹிட்லர் தியான் சந்த்திடம் விடுத்த கோரிக்கை மற்றும் அதற்கு தியான் சந்த் அளித்த பதில் யாது**?**

தியான் சந்த்தின் திறமையைக் கண்டு வியந்துபோன ஹிட்லர், அவருக்கு ஜெர்மனி நாட்டின் குடியுரிமையை அளிப்பதாகவும், மேலும் தனது இராணுவத்தின் படைத்தலைவராக நியமிப்பதாகவும் கூறி ஜெர்மனிக்கு குடியெருமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், தனக்கு தனது தாய்நாடுதான் முக்கியம் என்று கூறி ஹிட்லரின் கோரிக்கையை தியான் சந்த் மறுத்துவிட்டார். தியான் சந்த்தின் தேசப் பற்றையும், தைரியத்தையும் எண்ணி ஹிட்லரே வியந்துப் போனார்.

**4.** தியான் சந்த்திற்கு அளிக்கப்பட்ட விருதுகள், சிறப்புகள் பற்றி எழுதுக.

இந்திய அரசு தியான் சந்த்திற்கு **1956** ஆம் ஆண்டு பத்மபூஷன் விருதை அளித்து சிறப்பித்துள்ளது. **2012** ஆம் ஆண்டு இவரின் உருவம் பொறித்த தபால் தலையையும் வெளியிட்டது. தன்னம்பிக்கையின் ஊற்றாக திகழும் இவரைப் போற்றும் விதமாக, இவரின் பிறந்த நாளான ஆகஸ்ட் **29** ஆம் நாள் "தேசிய விளையாட்டு தினம்" என்ற பெயரில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் விளையாட்டுத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தவர்களுக்கு "தியான் சந்த் விருது" என்னும் தேசிய விருது இந்திய அரசால் வழங்கப்படுகிறது. தலைநகர் டெல்லியில் "மேஜர் தியான் சந்த் தேசிய விளையாட்டரங்கம்" என்ற விளையாட்டு அரங்கமும் இந்திய அரசால் கட்டப்பட்டுள்ளது. இவரின் புகழை போற்றும் விதமாக லண்டன் நகரிலுள்ள ஜிம்கானா கிளப் ஹாக்கி மைதானத்திற்கு இவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# 41. பகுபதம்

**பக்கம் 161**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சொல்
2. ஆறு
3. விகுதி
4. இரண்டு
5. தெரிநிலை வினைப் பகுபதம்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. பதம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

ஓர் எழுத்து தனித்து நின்றும், பல எழுத்துகள் சேர்ந்து வந்தும் பொருள் தருவது பதம் எனப்படும். பதம் என்பதற்கு சொல் என்னும் பொருளும் உண்டு. பகுபதம், பகாப்பதம் என்பன பதத்தின் இரண்டு வகைகள் ஆகும்.

2. பகுபதம் – விளக்குக.

ஒரு சொல்லைப் பகுதி, இடைநிலை, விகுதி எனப் பிரிக்க முடிந்தால் அது பகுபதம் எனப்படும்.

எ.கா. செல்வான்

| செல் | + | வ் | + | ஆன் |
|---|---|---|---|---|
| ↓ | | ↓ | | ↓ |
| பகுதி | | இடைநிலை | | விகுதி |

3. பகுபத உறுப்புகள் யாவை?

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறும் பகுபத உறுப்புகள் ஆகும்.

4. பகுதி, விகுதி என்றால் என்ன?

- **பகுதி:** ஒரு பகுபதத்தின் முதலில் அமையும் உறுப்பு பகுதி ஆகும். இதனை "முதல் நிலை" என்றும் அழைப்பர். பகுபதத்திலுள்ள பகுதி பொருளுடையதாக இருக்கும்.
- **விகுதி:** ஒரு பகுபதத்தின் இறுதியில் அமையும் உறுப்பு விகுதி ஆகும். இதனை "இறுதி நிலை" என்றும் அழைப்பர். விகுதியானது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

5. பகுபதங்களின் வகைகள் யாவை?

பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என்பன பகுபதங்களின் வகைகள் ஆகும்.

6. பெயர்ப் பகுபதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

பெயர்ச்சொல்லாக அமையும் பகுபதம் “பெயர்ப் பகுபதம்” எனப்படும். பெயர்ப் பகுபதம் ஆறு வகைப்படும்.

7. பெயர்ப் பகுபதத்தின் வகைகளை விளக்குக.

- ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டு அமைவது பொருட்பெயர்ப் பகுபதம் ஆகும்.
  எ.கா. பொன்னன்
  இது பொன் என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டு பொன்னை உடையவன் என பொருள் தருகிறது.
- ஓர் இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவது இடப்பெயர்ப் பகுபதம் ஆகும்.
  எ.கா. இந்தியன்
  இது “இந்தியா” என்ற இடத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்திய நாட்டைச் சேர்ந்தவன் என பொருள் தருகிறது.
- காலப்பெயர்களை அடிப்படையாகக் கொண்டு அமைவது காலப்பெயர் பகுபதம் ஆகும்.
  எ.கா. கார்த்திகையான்
  இது “கார்த்திகை” என்ற காலத்தை அடிப்படையாகக் கொண்டு, கார்த்திகை மாதத்தில் பிறந்தவன் என பொருள் தருகிறது.
- ஓர் உடல் உறுப்பின் பெயரை அடிப்டையாகக் கொண்டு அமைவது சினைப்பெயர்ப் பகுபதம் ஆகும்.
  எ.கா. தலையன்
  இது “தலை” என்ற உடல் உறுப்பின் பெயரை அடிப்படையாகக் கொண்டு, “தலையன்” எனும் பெயரைப் பெற்றுள்ளான் என பொருள் தருகிறது.
- குணத்தை (பண்பை) அடிப்படையாகக் கொண்டு அமைவது குணப்பெயர்ப் பகுபதம் ஆகும்.
  எ.கா. கரியன்
  இது “கருமை” என்ற நிறத்தை அடிப்படையாகக் கொண்டு, கருமை நிறத்தை உடையவன் என பொருள் தருகிறது.
- தொழிலின் பெயரை அடிப்படையாகக் கொண்டு அமைவது தொழிற்பெயர்ப் பகுபதம் ஆகும்.
  எ.கா. உழவன்
  இது “உழவு” என்ற தொழிலை அடிப்படையாகக் கொண்டு உழவுத் தொழில் செய்பவன் என பொருள் தருகிறது.

8. வினைப் பகுபதம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

காலத்தை வெளிப்படையாகவும், குறிப்பாகவும் காட்டும் வினைச்சொற்கள் வினைப் பகுபதங்கள் எனப்படும். தெரிநிலை வினைப் பகுபதம், குறிப்பு வினைப் பகுபதம் என்பன வினைப் பகுபதத்தின் வகைகள் ஆகும்.

9. தெரிநிலை வினைப் பகுபதம் என்றால் என்ன? எ.கா. தருக.

வினைச்சொற்களை பகுதியாகக் கொண்டு விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய உறுப்புகளுடனோ அல்லது அதற்கும் குறைவான உறுப்புகளுடனோ இணைந்து பொருள் தருவது தெரிநிலை வினைப் பகுபதம் எனப்படும்.

எ.கா. நடந்தான், வருகின்றாள், செல்கின்றான்

மேற்கண்ட சொற்கள் காலம், எண், திணை போன்றவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

10. குறிப்பு வினைப் பகுபதத்தை சான்றுடன் விளக்குக.

காலத்தை தெளிவாகக் காட்டாமல், குறிப்பால் மட்டுமே உணர்த்துவது குறிப்பு வினைப் பகுபதம் எனப்படும். இவை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையாகத் தோன்றி, வினைச்சொல்லின் பொருளைத் தரும்.

எ.கா. அவன் பொன்னன்.

இதில் காலம் என்பது வெளிப்படையாக காட்டப்படாமல், குறிப்பால் மட்டுமே உணர்த்தப்பட்டுள்ளது. இதன் பொருளை விளக்கிப் பார்த்தால், அவன் பொன்னனாக இருந்தவன், பொன்னனாக இருக்கின்றவன், பொன்னனாக இருப்பான் எனப் பொருள் தந்து காலத்தை குறிப்பால் உணர்த்துகிறது.

## 42. வானம்பாடி

**பக்கம் 166**

**அ) பிரித்து எழுதுக.**

1. இணை + இல்லை
2. உலகில் + உள்ள
3. பணி + பெண்
4. பசு + மாடு
5. உருண்டு + ஓடிய

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. மதுராபுரிக்கு பிற நாட்டு அரசர்களும், மக்களும் வரக் காரணம் யாது?

மதுராபுரி அரண்மனையின் அழகைப் பார்ப்பதற்கென்றே பிற நாட்டு அரசர்களும், மக்களும் வருவார்கள்.

2. வானம்பாடியைக் கண்டுபிடிக்க அரசன் யாரை காட்டிற்கு அனுப்பினான்?

வானம்பாடியைக் கண்டுபிடிக்க அரசன் தனது அமைச்சரை காட்டிற்கு அனுப்பினான்.

3. அமைச்சருக்கு காட்டில் உதவி செய்தது யார்? அவருக்கு அமைச்சர் அளித்த வாக்கு என்ன?

அமைச்சருக்கு காட்டில் உதவி செய்தது நன்மதி என்ற பெண். வானம்பாடியை கண்டுபிடிக்க உதவி செய்தால், அவளை அரண்மனையின் முதன்மை பணிப்பெண்ணாக பதவியமர்த்துவதாக அமைச்சர் வாக்களித்தார்.

4. வேங்காபுரி அரசர் மாறவர்மனுக்கு இரண்டாவதாக அனுப்பி வைத்த பரிசு என்ன?

முத்து, பவளம், வைரம், வைடூரியம் என பலவகை கற்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு செயற்கை வானம்பாடிப் பொம்மையே வேங்காபுரி அரசர் மாறவர்மனுக்கு இரண்டாவதாக அனுப்பி வைத்த பரிசு ஆகும்.

5. “வானம்பாடி” கதையின் நீதி யாது?

ஆடம்பரம் என்பது அழிவைத் தரும். இயற்கை ஒன்றே அனைவருக்கும் இன்பத்தை தரும் என்பதை நாம் உணர வேண்டும். மனித வாழ்விற்கு செயற்கையை விட, இயற்கையே ஊக்கமளித்து உரமூட்டுகிறது. இயற்கையைப் போற்றினால் மட்டுமே சிறப்பாக வாழ முடியும்.